Registered as a Newspaper

பக்கங்கள் - 12
விலை - ரூபா 50

# உதயன்

சுடர் : 39
கதிர் : 198

செவ்வாய்க்கிழமை
11 ஜூன் 2024

முச்சந்தி முரளி



"அவரை இஞ்ச
கூப்பிட்டாத்தானே
ஏதும் கடன்
கேக்கலாம்
கண்டியளோ"



# நாட்டைப் பிரிப்பதற்கு சஜித் தீவிர முயற்சி!

## பொதுஜன பெரமுன குற்றச்சாட்டு

கொழும்பு, ஜூன் 11

அரசமைப்பின் 13 ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்துவதாக சஜித் தெரிவித்தமை, நாட்டைப் பிரிப்பதற்கு எடுக்கப்பட்டுள்ள முயற்சியாகவே எண்ண வேண்டியுள்ளது என்று பெரமுன தெரிவித்துள்ளது.

11



தேர்தல் நெருங்கும் நிலையில்

# இலங்கைக்கு வருக!

## ஜெய்சங்கருக்கு அழைப்பு

புதுடில்லி, ஜூன் 11

ஜனாதிபதித் தேர்தல் காலம் நெருங்கும் நிலையில், இந்திய அமைச்சர் ஜெய்சங்கரை இலங்கைக்கு வருமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேற்று நேரில் அழைப்பு விடுத்துள்ளார். இந்த அழைப்பை ஜெய்சங்கரும் ஏற்றுக்கொண்டுள்ளார்.

11



# நாடாளுமன்றில் பேசுவேன்!

## பட்டதாரிகளுக்கு சஜித் உறுதியளிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 11

யாழ்ப்பாணத்தில் போராட்டத்தில் ஈடுபட்ட வேலையற்ற பட்டதாரிகளை எதிர்க்கட்சித் தலைவர் சஜித் சந்தித்துக் கலந்துரையாடியதுடன் நாடாளுமன்றில் இது தொடர்பாக பேசுவதாகவும் வாக்குறுதியளித்

11

# தமிழீழம் வேண்டும் மோடியிடம் கேட்பேன்

## மதுரை ஆதீனம் தெரிவிப்பு

புதுடில்லி, ஜூன் 11

பிரதமர் நரேந்திர மோடியிடம் ஈழத் தமிழர்களுக்காக தமிழீழம் கேட்பேன் என மதுரை ஆதீனம் தெரிவித்துள்ளார். இந்திய மக்களவைத் தேர்தலில் தேசிய ஜனநாயகக் கூட்டணி வெற்றிபெற்றதன்

11

# 2025க்கு பட்ஜெட் இல்லை!

## நிதி இராஜாங்க அமைச்சர் தெரிவிப்பு



கொழும்பு, ஜூன் 11

2025ஆம் ஆண்டுக்கான பட்ஜெட் தயாரிக்கப்படமாட்டாது என்று நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார்.

இந்த வருடத்தில் இரண்டு முக்கியமான தேர்தல்கள் இடம்பெறவுள்ளன. ஆதலால், 2025 ஆம் ஆண்டு பட்ஜெட் தொடர்பில் இப்போது கவனம்

11

# சுவர் இடிந்து சிசு இறப்பு!

வவுனியா, ஜூன் 11

ஓமந்தை, புதிய வேலர் சின்னக்குளத்தில் வீட்டின் சுவர் வீழ்ந்து இரண்டு மாதக் குழந்தையொன்று உயிரிழந்துள்ளது.

11

# கிணற்றுள் இருந்து தோட்டாக்கள் மீட்பு

முல்லைத்தீவு, ஜூன் 11

முல்லைத்தீவு பிரதேசத்தில் கிணற்றுக்குள் இருந்து 992 தோட்டாக்கள் மீட்கப்பட்டுள்ளன.

கிணற்றைச் சுத்தம் செய்வதற்கு உரிமையாளர் தயாரான போது, கிணற்றுக்குள் தகரப்பெட்டியொன்று காணப்பட்டுள்ளது. இது தொடர்பில் புதுக்குடியிருப்புப் பொலிஸாருக்குத் தகவல் வழங்கப்பட்டதைத் தொடர்ந்து சம்பவ இடத்துக்கு விரைந்த பொலிஸார்

11

# பதவிக்கு வந்த அன்றே நாடாளுமன்றம் கலைப்பு

## அநுரவின் திட்டம்



கொழும்பு, ஜூன் 11

தேசிய மக்கள் சக்தி ஜனாதிபதித் தேர்தலில் வெற்றிபெற்ற அன்று இரவே நாடாளுமன்றத்தைக் கலைத்துவிடுவோம். ஒருநாள்கூட பழைய நாடாளுமன்றம் இருக்காது - இவ்வாறு ஜே.வி.பி.யின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.

கொழும்பில் இடம்பெற்ற ஓய்வுபெற்ற பொலிஸ் அதிகாரிகளின் மாநாட்டிலேயே அநுர

11



# சட்டவிரோத மீன்பிடியை உடன் கட்டுப்படுத்துக!

முல்லை. மீனவர்கள் ஆர்ப்பாட்டம்!

முல்லைத்தீவு, ஜூன் 11

முல்லைத்தீவு மாவட்டத்தில் அதிகரித்துவரும் சட்டவிரோத மீன்பிடியைக் கட்டுப்படுத்த வேண்டும் என்று முல்லைத்தீவு மீனவர்கள் நேற்றுப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

முல்லைத்தீவு மாவட்டச் செயலகத்துக்கு முன்பாக நேற்று மு.ப. 11 மணியில் இருந்து அவர்கள் இந்தப் போராட்டத்தை முன்னெடுத்தனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் ஒருபகுதியினர் சட்டவிரோத

11

# நெடுந்தாரகைப் படகு ஜூலையில் சேவைக்கு

யாழ்ப்பாணம், ஜூன் 11

நெடுந்தாரகை அடுத்த மாதம் முதல் சேவைக்குத் திரும்பும் என வீதி அபிவிருத்தி அதிகாரசபை வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.

நெடுந்தீவுக்கான படகுப் போக்குவரத்து மார்க்கங்களில் பிரதானமாக நெடுந்தாரகையும்

11



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாட்டின் அரசியல் சுக்கானை இளையோரிடம் வழங்குவோம்

## தேசிய மக்கள் சக்தி தெரிவிப்பு



கொழும்பு, ஜூன் 11

**நாட்டில் மக்களை விழித்தெழச் செய்விப்பதில் பெரும் செயற்பொறுப்பை ஆற்றியவர்கள் நிகழ்கால இளைஞர் தலைமுறையினராவர். அவர்களின் எதிர்பார்ப்புகள் வித்தியாச மானவை. இந்தத் தலைமுறையினரிடம் நாட்டின் அரசியல் சுக்கான் கையளிக்கப்படவேண்டும்.**

-இவ்வாறு தேசிய மக்கள் சக்தியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

இளைஞர் தலைமுறையினரிடம் குமுறிக்கொண்டிருக்கின்ற வேதனைகளிலிருந்து உருப்பெற்ற போராட்டத்தால் ஊழல் ஆட்சியாளர்கள் தூக்கியெறியப்பட்டு அவர்களுக்கு பாடம் கற்பிக்கப்பட்டது. மக்களிடமிருந்து கொள்ளையடித்த சொத்துகளை மீளவும் கையகப் படுத்தவேண்டுமென்ற கோஷமொன்று போராட்டத்தில் நிலவியது.

இளைஞர் தலைமுறையினர் நிராகரித்த பொருளாதாரமே இந்த நாட்டில் நிலவுகின்றது. இந்தப் பொருளாதாரத்துடன் இணைந்து கொள்ளாத பெருந்தொகையான இளைஞர்கள் வெளிநாடுகளுக்குச் செல்கின்றனர். அவர்களோடு இணைந்த திட்டங்களை கொண்டு செல்வதற்கான வழிவகைகளை ஆட்சியாளர்கள் வகுத்துள்ளார்களா? நாம் அவர்களுடன் ஒன்று சேர்ந்து புத்துணர்ச்சியுடன் நாட்டின் மாற்றத்துக்குப் பங்களிப்போம்- என்றார். (ச-இ)

# யாழ். பாடசாலைகளுக்கு சஜித்தின் வேலைத்திட்டம்

கொழும்பு, ஜூன் 11

யாழ்.மாவட்டப் பாடசாலைகளை மையமாகக் கொண்டு ஸ்மார்ட் வகுப்பறை வசதிகள் மற்றும் பாடசாலை பேருந்துகள் கையளிக்கும் பிரபஞ்சம் வேலைத்திட்டம், எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவின் எண்ணக்கருவில் முன்னெடுக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த வேலைத்திட்டத்தின் கீழ் யாழ். மாவட்டத்தின் 13 பாடசாலைகளுக்கு 11 இலட்சத்து 77 ஆயிரம் ரூபா பெறுமதியான கணினிகள், அச்சு இயந்திரங்கள், ஸ்மார்ட் வகுப்பறை உபகரணங்கள், ஸ்மார்ட் திரைகள் மற்றும் அகராதிகள் என்பன வழங்கப்படவுள்ளன. பாடசாலையொன்றுக்கு 50 இலட்சம் ரூபா மதிப்பிலான பஸ் ஒன்றும் வழங்கிவைக்கப்படவுள்ளது.

இதேவேளை - யாழ்.மாவட்டத்துக்கு சஜித்பிரேமதாஸ, இந்தச் செயற்றிட்டத்தை நடைமுறைப்படுத்தவுள்ளார் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (ச-இ)

# சம்பிக்கவை வளைக்க ஐ.ம.சக்தி பிரயத்தனம்

கொழும்பு, ஜூன் 11

குடியரசு முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான சம்பிக்க ரணவக்கவை தமது கூட்டணியில் இணைத்துக்கொள்வதற்குப் பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி முயற்சித்து வருகின்றது என்று தகவல் வெளியாகியுள்ளது.

ஐக்கிய மக்கள் சக்தியின் தவிசாளர் பதவியை வகிக்கும் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா கட்சியில் இருந்து விரைவில் வெளியேறத் திட்டமிட்டுள்ளார். அதே நேரம் ராஜித சேனாரத்னவும் ரணிலை ஆதரிக்கும் நிலைப்பாட்டிலேயே உள்ளார். இவ்விருவரின் இடைவெளியை நிரப்பும் வகையிலும், சிங்கள - பௌத்த வாக்கு வங்கியைக் குறிவைத்தும் சம்பிக்க ரணவக்கவுக்கு சஜித் தரப்பு வலைவிரித்துள்ளது.

கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் ஐக்கிய மக்கள் சக்தி பட்டியலின் கீழ்தான் சம்பிக்க ரணவக்க போட்டியிட்டார். அதன்பின்னர் ஐக்கிய மக்கள் சக்தியில் இருந்து வெளியேறி, புதிய கட்சியை உருவாக்கியிருந்தார். (எ-இ)

# பொதுவேட்பாளராக களமிறங்கும் ரணில்

பொதுஜன பெரமுன வேட்பாளரை நிறுத்தாது. ரணில் விக்கிரமசிங்கவே ஜனாதிபதித் தேர்தலில் பொது வேட்பாளராக களமிறங்குவார் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் ஹரிசன் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நாட்டில் யார் என்ன சொன்னாலும் ஜனாதிபதித் தேர்தலே முதலில் நடக்கும். அத்தேர்தலில் ரணில் விக்கிரமசிங்கவே பொது வேட்பாளராகக் களமிறங்குவார்.

மொட்டுக் கட்சி சார்பில் வேட்பாளர் இல்லை, இது தொடர்பில் அச்சம் கொள்ள வேண்டியதில்லை. சுதந்திரக் கட்சியும் வேட்பாளரை நிறுத்தாது. எனவே, 100 இலட்சத்துக்கு மேற்பட்ட வாக்குகளைப் பெற்று ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்க வெற்றிபெறுவார் - என்றார். (ஒ-44)

# ரணிலை நெருக்கடிக்கு உள்ளாக்கும் பெரமுன!

## ஆளும் கட்சி எம்.பி. விசனம்

கொழும்பு, ஜூன் 11

ஜனாதிபதியை நெருக்கடிக்குள்ளாக்கும் வகையில் பொதுஜன பெரமுனவின் உறுப்பினர்களில் ஒரு தரப்பினர் செயற்படுவது முறையற்றது என்று ஆளும் தரப்பு நாடாளுமன்ற உறுப்பினர் பிரேம்நாத் சி.தொலவத்தே தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் தெரிவித்துள்ளதாவது:-

நெருக்கடியான சூழலில் தான் தலைவர்கள் தோற்றம் பெறுவார்கள். ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் தகைமை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கே உண்டு.

2022 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் நாடு தற்போது இயல்பு நிலைக்குத் திரும்பியுள்ளது. தற்போதைய பொருளாதார நெருக்கடிக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால் மாத்திரமே தீர்வு காணமுடியும் என மக்கள் கருதுகின்றனர். பொருளாதார ரீதியில் அடைந்துள்ள தற்காலிக ஸ்திரத்தன்மையை நிலையானதாக உறுதிப்படுத்திக்கொள்ள ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கம் மீண்டும் உருவாகவேண்டும். ஜனாதிபதி ரணில் விக்கிரம சிங்க பொதுவேட்பாளராகக் களமிறங்கவேண்டும் என்பதை அவரிடம் வலியுறுத்தியுள்ளோம் - என்றார். (எ-இ)

# பறிபோன ஆட்சியை மீண்டும் பெறுவோம்

## பெரமுன சூளுரை

கொழும்பு, ஜூன் 11

நாட்டைப் பிளவுபடுத்தாமல் ஒற்றையாட்சியைப் பாதுகாக்கவே பொதுஜன பெரமுனக் கட்சிக்கு மக்கள் ஆணை வழங்கினர். அந்த ஆணையைத் தவறாகவே சிலர் பறித்தெடுத்தனர். அதனை நிச்சயம் நாம் மீளப்பெறுவோம் என்று பொதுஜன பெரமுனவின் பொதுச்செயலர் சாகர காரியவசம் சூளுரைத்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

புலிகளுக்கு உதவிய கெட்ட சக்திகள் இணைந்தே 2015 இல் நல்லாட்சியை உருவாக்கின. 6.8 ஆக இருந்த பொருளாதார வளர்ச்சி சீர்குலைந்தது. உயிர்த்த ஞாயிறு தாக்குதல் இடம்பெற்றது.

வடக்கு - கிழக்கில் விகாரைகள் தரைமட்டமாக்கப்பட்டன. பிக்கு ஒருவரின் சடலத்தைக்கூட புதைக்க முடியாத நிலைக்கு நாட்டைக் கொண்டுவந்தனர். எம்.சி.சி. உடன்படிக்கை உட்பட நாட்டைப் பிளவுபடுத்தும் ஒப்பந்தங்களை செய்துகொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது.

இதனால்தான் நாட்டு மக்கள், நாட்டுக்காக ஒன்றிணைந்தனர். பொதுஜன பெரமுனவைக் கட்டியெழுப்பினர். நாட்டைப் பாதுகாப்பதற்காகவே இக்கட்சி உருவாக்கப்பட்டது. மக்கள் வழங்கிய ஆணையின் பிரகாரம் நாட்டுக்குச் செய்யவேண்டிய விடயங்களை நாம் செய்தோம். எனினும், கொரோனா பெருந்தொற்றால் கடும் நெருக்கடி நிலை ஏற்பட்டது. அப்போதுகூட நாட்டு மக்களின் உயிரைக் காக்கவே முன்னுரிமை வழங்கினோம்.

2015 இல் சூழ்ச்சியில் ஏற்பட்டவர்களுக்கு தண்டனை கிடைத்துள்ளது. சிலருக்குக் கட்சி தலைமை பதவி கூட பறிபோயுள்ளது. நீதிமன்றத்தில் வழக்குகள் குவிந்துள்ளன. சிலருக்கு வாக்குக் கேட்க கட்சி இல்லை. எமது பின்னால் வருகின்றனர்.

அதேவேளை, நாட்டை விற்கவோ, பிளவுபடுத்தவோ, ஒற்றையாட்சிக்கு அச்சுறுத்தலை ஏற்படுத்தவோ 69 இலட்சம் பேர் எமக்கு வாக்களிக்கவில்லை. இவற்றை பாதுகாக்கவே எமக்கு ஆணை வழங்கினர். அவ்வாறு வழங்கப்பட்ட ஆணையை சிலர் தவறாகப் பறித்துக் கொண்டனர். எம்மிடமிருந்து தவறாகப் பறிக்கப்பட்ட அதிகாரத்தை மீளப்பெறுவோம். எமக்குரியதை நாம் நிச்சயம் மீளப்பெறுவோம் - என்றார். (ஒ-44)

# விஜயதாஸவுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை



ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியுடன் இணைந்துள்ள நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்சவுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பதற்கு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனக் கட்சி தீர்மானித்துள்ளது.

மொட்டுக் கட்சியின் அரசியல்குழு நேற்றுமுன்தினம் கூடியது. அதில் கட்சியின் ஒழுக்காற்று விசாரணைக்குழு முன்வைத்த யோசனைக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது என்று நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.பி. திஸாநாயக்க தெரிவித்துள்ளார். அரசியல் குழுக் கூட்டத்தில் தேர்தல் தொடர்பில் கலந்துரையாடப்பட்டது. நாடாளுமன்ற உறுப்பினர் ரோஹித அபேகுணவர்தனவுக்குத் தேசிய ஏற்பாட்டாளர் பதவி வழங்கப்பட்டுள்ளது. அதேபோல் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவில் போட்டியிட்டு, தற்போது மற்றுமொரு கட்சியில் இணைந்துள்ள விஜயதாஸ ராஜபக்சவுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பதற்கு ஒழுக்காற்று விசாரணைக்குழு அனுமதி கோரி இருந்தது. அதற்குரிய அனுமதியும் வழங்கப்பட்டது என்று அவர் தெரிவித்துள்ளார். (எ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீண்டும் அதிகரித்துள்ள மொத்தக் கடன் நிலுவை

கொழும்பு, ஜூன் 11

**இலங்கையின் மொத்தக் கடன் நிலுவை 100.18 பில்லியன் டொலர் எனவும், செலுத்தப்படாத கடனுக்கான வட்டி 6.4 பில்லியன் டொலர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.**

2023ஆம் ஆண்டின் இறுதியில் 96.17 பில்லியன் டொலராகக் காணப்பட்ட கடன் நிலுவை தவறான நிதி திட்டமிடல்கள் காரணமாக 100.18 பில்லியன் டொலராக அதிகரித்துள்ளது. 2023ஆம் ஆண்டின் இறுதியில் 12.63 பில்லியன் டொலராகக் காணப்பட்ட உள்நாட்டுக் கடன் நிலுவை இந்த வருடத்தின் முதல் மூன்று மாதங்களில் 12.92 பில்லியன் டொலராக அதிகரித்துள்ளது. உள்நாட்டுக் கடனுக்கான வட்டி 2.45 ட்ரில்லியன் ரூபா எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை உலகவங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி மற்றும் ஜப்பான், சீன உதவித் திட்டங்களும் கடனாகவே வழங்கப்பட்டுள்ளன. (எ-6)

## மாணவர் தனியார் கல்வி கடன் திட்டம் அதிகரிப்பு

கொழும்பு, ஜூன் 11

2023 ஆம் ஆண்டு உயர்தரப் பரீட்சையில் சித்தியடைந்து அரச பல்கலைக்கழகங்களுக்குள் நுழைவதற்குப் போதிய புள்ளிகளைப் பெறாத மாணவர்களுக்கு, தனியார் உயர்கல்வி நிறுவனங்களில் பட்டம் பெறுவதற்கான கடன் தொகை அதிகரிக்கப்பட்டுள்ளது என்று கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

இதுவரை வழங்கப்பட்ட கடன் தொகையிலும் பார்க்க தற்போது குறித்த தொகை பதினைந்து இலட்சம் ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது. இந்தக் கடன் தொகையை வழங்குவதற்கான ஏற்பாடுகளை தற்போது இலங்கை மத்தியவங்கி மேற்கொண்டுள்ளது.

இந்தக் கடன் வட்டியற்றது மற்றும் பட்டப்படிப்புக்குப் பின் ஒரு வருட சலுகைக் காலத்துக்குப் பிறகு திருப்பிச் செலுத்தப்பட வேண்டும் என்றும் கல்வியமைச்சு குறிப்பிட்டுள்ளது. (ச-இ)

## ரஷ்யா செல்லும் அலி சப்ரி



கொழும்பு, ஜூன் 11

ரஷ்யாவின் வெளியுறவுத்துறை அமைச்சர் செர்ஜி லாவ்ரோவ் அழைப்பின் பேரில், இலங்கையின் வெளிவிவகார அமைச்சர் ஜனாதிபதி சட்டத்தரணி அலி சப்ரி ரஷ்யாவுக்குச் செல்லவுள்ளார். அங்கு நடைபெறவுள்ள பிரிக்ஸ் அமைச்சர்கள் அமர்வில் அவர் கலந்துகொள்ளவுள்ளார்.

பிரிக்ஸ் அமைச்சர்கள் அமர்வுக்கு சமாந்தரமாக நடைபெறும் நிகழ்வுகளில் அவர் பங்கேற்கவுள்ளதோடு, அமர்வை நடத்தும் ரஷ்யாவின் ஆளும் தரப்பினருடன் இருதரப்பு பேச்சுகளிலும் பங்கேற்கவுள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது. (எ-இ)

## தடைப்பட்டியலில் 90 பேர் நீக்கம்

கொழும்பு, ஜூன் 11

கடந்த மூன்றாம் திகதி வெளியிடப்பட்ட தடை செய்யப்பட்ட பயங்கரவாத அமைப்புகளுடன் தொடர்புடைய நபர்களின் பட்டியலில், காணப்பட்ட 90 பேரின் பெயர்கள் நீக்கப்பட்டுள்ளன என்று பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

2012ஆம் ஆண்டு பாதுகாப்பு அமைச்சு தடைசெய்யப்பட்ட பயங்கரவாத அமைப்புகளுடன் தொடர்பு வைத்திருந்ததாக தெரிவித்து சில புலம்பெயர் தமிழ் அமைப்புகளையும், தனி நபர்களையும் அதி விசேடவர்த்தமானி அறிவித்தல்மூலம் தடை செய்திருந்தது.

2023ஆம் ஆண்டு ஜூன் 8ஆம் திகதி 15 அமைப்புகளும் 301 தனி நபர்களும் புலிகளுக்கு நிதி சேகரித்தனர் என்றும், இஸ்லாமிய பயங்கரவாத அமைப்புகளுடன் தொடர்பு வைத்திருந்தனர் என்றும் கூறி அதி விசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் இலங்கை அரசாங்கம் தடை செய்திருந்தது.

கடந்த மூன்றாம் திகதி வெளியிடப்பட்ட மீளாய்வு செய்யப்பட்ட அதி விசேட வர்த்தமானி அறிவித்தலில் 2023ஆம் ஆண்டு ஜூன் 8ஆம் திகதி வெளியிடப்பட்ட பட்டியலில் காணப்பட்ட 90 பேரின் பெயர்கள் நீக்கப்பட்டுள்ளன என்று பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது. (எ-6)

## தங்கம் கடத்த முயன்றவர் சென்னையில் சிக்கினார்!

கொழும்பு, ஜூன் 11

இலங்கைப் பயணி ஒருவரிடமிருந்து 85 மில்லியன் ரூபா பெறுமதியான 13.5 கிலோ தங்கம் சென்னை விமான நிலையத்தில் சுங்க அதிகாரிகளால் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது என்று இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

சிங்கப்பூரில் இருந்து கடந்த சனிக்கிழமை வந்த 29 வயதான இலங்கைப் பயணி ஒருவரிடம் இருந்தே தங்கம் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.

இந்தச்சம்பவம்தொடர்பாக இண்டிகோ விமான நிறுவன ஊழியர் ஒருவரும் கைது செய்யப்பட்டுள்ளார் என இந்திய ஊடகங்கள் குறிப்பிட்டுள்ளன. (எ-இ)

## உடுப்பிட்டி மகளிர் கல்லூரியின் திறன் வகுப்பறை திறந்துவைப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 11

உடுப்பிட்டி மகளிர் கல்லூரியின் திறன் விருத்தி வகுப்பறையை எதிர்க்கட்சித் தலைவரான சஜித் நேற்றுத் திறந்து வைத்தார்.

பாடசாலையின் அதிபர் தலைமையில் இந்த நிகழ்வு நடைபெற்றது. நாடாளுமன்ற உறுப்பினர்களான எம்.ஏ. சுமந்திரன், அங்கஜன் இராமநாதன் ஆகியோரும் நிகழ்வில் கலந்துகொண்டனர். (ம-100)



## பட்சி தினம் தெரியுமோ?

**நே**ற்று பட்சி ஒரு சம்பவத்தைச் சொல்லிப்போட்டு. அதுக்கான நதிமூலம் என்ன எண்டு இண்டைக்குச் சொல்லுறதெண்டு முடிச்ச விசயத்தைப் பாப்பம்.

யாழ்ப்பாணக் கம்பஸில இப்ப எக்ஸாம் எழுதிறதெண்டால் எண்பது வீத வரவு முக்கியம். முந்தியெண்டால் வகுப்புக்குப் போகாமல் விட்டிட்டு, பிறகு வரவு பத்தாது எண்டவுடன லெக்ஸர்மாரின்ர காலைக் கையைப் பிடிச்சு, எக்ஸாம் எழுதமுடியும். ஆனால் இப்ப எல்லாமே ஒரு சிஸ்டத்துக்க வந்திட்டு. எல்லாரும் தங்கட வரவு என்ன கட்டத்தில இருக்கெண்டு ஒவ்வொரு கிழமையும் ஒன்லைனில பாக்கமுடியும். அப்பிடி ஒன்லைன்ல இந்த வரவு சிஸ்டத்தைக் கொண்டந்ததே, படிக்கிற பிள்ளையளுக்கு ஏன் வரவு குறையுது எண்டு கண்டுபிடிச்சு, அதைத் தீர்க்கிறதுக்குத்தான். முதலில இதை அறிமுகப்படுத்தினது கலைப்பீடம் தான். இந்த சிஸ்டம் பிள்ளையள் வகுப்புகளுக்கு கட் அடிக்காமல் வரவேணும் எண்டதுக்காக மட்டும் கொண்டுவரப்படேலை. பிள்ளையள் வகுப்புக்கு வரேல எண்டிட்டு மீன்சந்தைக்கும், வீட்டில சமைக்கிறதுக்கும் போற லெக்சரர்மாருக்கு ஆப்பு வைக்கத்தான் இது வந்தது. எல்லாரும் எந்தெந்த கிளாஸ் எப்பெப்ப நடந்தது எண்டு ஒன்லைனிலயே பாக்கக்கூடியதா இருக்கிறதால, முந்தினமாதிரி லெக்சரர்மாரும் விளையாட்டுக்காட்ட ஏலாது.

பிள்ளையளுக்கு கிளாஸ் நேரத்தால ஏதும் சிக்கல் எண்டால் இந்த சிஸ்டம் கண்டுபிடிச்சு அதைத் தீர்க்கவும் வழிசெய்யுது. ஒரு பிள்ளை ஒவ்வொரு புதன்கிழமையும் கிளாஸுக்கு வராமல் இருந்திருக்கு. அதை இந்த சிஸ்டத்தில கவனிச்சுப் போட்டு, 'ஏன் ஒவ்வொரு புதனும் வாறேலை?' எண்டு கேட்டிருக்கினம். அதுக்கு 'அண்டைக்கு அம்மாக்கு கிளினிக் இருக்கு. அவாவை ஹொஸ்பிட்டலுக்கு நான் தான் கூட்டிக்கொண்டு போகோணும்' எண்டு அந்தப் பிள்ளை பதில் சொல்லி இருக்கு. அதுக்குப் பிறகு அந்தப் பிள்ளைக்கு ஏத்தவிதத்தில கிளாஸ் ரைமில மாற்றம் செய்தவையாம். இப்பிடி பிள்ளையளுக்கு நல்லது செய்ய வெண்டு உருவாக்கின இதே சிஸ்டம் மற்ற பீடங்களிலையும் பரவிட்டுது. ஆனால் எங்கட ஆக்கள் எந்த நல்லவிசயத்தையும் எப்பிடி தங்களுக்கு ஏத்தபடி ஆப்படிக்கத்தான் அதிகமாப் பாவிப்பினமெண்டது தெரியும் தானே.

விஞ்ஞான பீடத்தில இந்தமுறை 200 பேருக்கும் மேல எண்பது வீத வரவில்லாததால எக்ஸாம் எழுத ஏலாது எண்டு அறிவிச்சிருக்கினம். ஆனால், இந்தத் திட்டம் இந்த முறைதான் நடைமுறைக்கு வந்ததால, ஒரு வெருட்டுக் குடுத்துப்போட்டு அவையை எழுத விடுங்கோ எண்டு விஞ்ஞானபீட மாணவர் ஒன்றியக்காரர் கேட்டிருக்கினம். ஆனால் அந்தப் பீடத்தின்ர 'பெரியதலையள்' மாட்டன் எண்டிட்டினம். ஆனால் மாணவர் ஒன்றியம் விடேலை. வரவு பத்தாது எண்டு அறிவிச்ச அந்த லிஸ்ட்டில கனக்கப் பிழையள் இருந்திருக்கு. அதையெல்லாம் மாணவர் ஒன்றியக்காரர் ஒவ்வொண்டாக் கண்டுபிடிச்சு 'இப்பிடி பிழையான தரவுகளோட தயாரிச்ச லிஸ்ட்டை வைச்சு மாணவர்களின்ர வாழ்க்கையோட விளையாட வேண்டாம்' எண்டு கேட்டிருக்கினம். ஆனாலும் பெரியதலையளின்ர ஈகோ அதுக்கு இடம் குடுக்கேலை. அவை பிறகு இன்னொரு லிஸ்ட் விட்டு, இதில உள்ளவை எக்ஸாம் எழுத வரவு பத்தாது எண்டிருக்கினம். அதிலையும் பிழையளை, மாணவர் ஒன்றியத்தின்ர தலைவர் கண்டுபிடிக்க, பெரிய தலையள் இன்னொரு லிஸ்ட் தயாரிக்க, அதிலையும் இந்த மாணவர் ஒன்றியத்தலைவர் பிழை பிடிக்க, இப்பிடியே லிஸ்ட் விடுறதும், அதில பிழையைக் கண்டுபிடிக்கிறதுமா போய், கடைசியில பெரும்பாலான ஆக்களை எக்ஸாம் எழுத விட்டவை.

எண்டாலும் ஒரு சின்னப்பெடியன் எங்கட லிஸ்ட்டில பிழைக்கு மேல பிழை கண்டுபிடிச்சு, எங்களுக்கே தலைசுத்தவைச்சிட்டான் எண்டு உள்ளுக்க கறுவிக்கொண்டிருந்திருக்கினம். அதலாதான் 'ஸ்ரடி ஹோல்' பூட்டை உடைச்சதெண்டு சொல்லி இப்ப 'அவுட்டபோன்ஸ்' (வகுப்புத்தடை) போட்டு கொண்டாடுகினமாம்.

- பட்சி

padsi@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** புதிய முயற்சிகளில் ஈடுபடுவதைத் தவிர்க்கவும். உறவினர்களாலும் நண்பர்களாலும் அலைச்சலும் செலவுகளும் ஏற்படும். தந்தைவழி உறவினர்களால் சில பிரச்சினைகள் ஏற்பட்டு நீங்கும். தேவையற்ற வீண்செலவுகள் மனதை சஞ்சலப்படுத்தும்.

**இடபம்:** மனதில் உற்சாகம் பெருக்கெடுக்கும். தாயின் விருப்பத்தை நிறைவேற்றுவீர்கள். தாய் வழி உறவினர்களிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். சிலருக்கு புதிய நண்பர்களின் அறிமுகம் ஏற்படும்.

**மிதுனம்:** எதிர்பார்த்த பணம் கைக்குக் கிடைக்கும். வீட்டில் உள்ளவர்கள் உங்கள் ஆலோசனையைக் கேட்டுச் செயற்படுவார்கள். மாலையில் வாழ்க்கைத்துணை வழியில் மகிழ்ச்சியான செய்தி கிடைக்க வாய்ப்பு உள்ளது.

**கடகம்:** உற்சாகமான நாள். புதிய முயற்சிகள் வெற்றிகரமாக நிறைவேறும். எதிரிகளால் ஏற்பட்ட தொல்லைகள் நீங்கும். சகோதர வகையில் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடிவதுடன் அவர்கள் மூலம் பணவரவுக்கும் வாய்ப்பு உண்டு.

**சிம்மம்:** முக்கியமான முடிவு எடுப்பதைத் தவிர்ப்பது நல்லது. மனதில் தேவையற்ற குழப்பம் ஏற்பட்டு நீங்கும். ஒரு சிலருக்கு தெய்வப் பணிகளில் பங்கேற்கும் வாய்ப்பு உண்டாகும். வியாபாரத்தில் எதிர்பார்த்த லாபம் கிடைக்கும்.

**கன்னி:** தேவையான பணம் கிடைக்கும். சகோதரர்கள் பணம் கேட்டு நச்சரிப்பார்கள். சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கும் வாய்ப்பு உண்டு. தாயின் உடல் ஆரோக்கியத்தில் கவனம் செலுத்தவும்.

**துலாம்:** காரியங்களில் அனுகூலம் உண்டாகும். ஆனால், குடும்பம் தொடர்பான முக்கியமான முடிவுகள் எதையும் எடுக்கவேண்டாம். சிலருக்கு வேலை விஷயமாக வெளியில் செல்ல நேரிடும் என்பதால் எச்சரிக்கையுடன் இருக்கவும்.

**விருச்சிகம்:** சகோதர வகையில் எதிர்பார்த்த காரியம் இழுபறியாகும். சிலருக்கு வீண் செலவுகள் ஏற்படும். கணவன் - மனைவிக்கிடையே சிறுசிறு விவாதங்கள் ஏற்படக்கூடும் என்பதால் பொறுமை அவசியம்.

**தனுசு:** குடும்பத்தில் சிறுசிறு சலசலப்பு ஏற்பட்டாலும், சமயோசிதமாக சமாளித்து விடுவீர்கள். கணவன் - மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். பிள்ளைகளின் விருப்பத்தை நிறைவேற்றுவீர்கள்.

**மகரம்:** மனதில் தைரியமும் தன்னம்பிக்கையும் அதிகரிக்கும். தொடங்கும் காரியம் அனுகூலமாக முடியும். வாழ்க்கைத்துணையால் மகிழ்ச்சி உண்டாகும். உங்களுடைய முயற்சிகளுக்கு குடும்பத்தினரின் ஆதரவு கிடைக்கும்.

**கும்பம்:** இன்று நீங்கள் தொடங்கும் புதிய முயற்சி சாதகமாக முடிவதுடன், அதனால் எதிர்பார்த்த ஆதாயமும் கூடுதலாக இருக்கும். சகோதர வகையில் எதிர்பார்த்த காரியம் இழுபறிக்குப் பிறகுதான் முடியும்.

**மீனம்:** காரியங்கள் அனுகூலமாக முடியும். அதிகப்படியான செலவுகள் ஏற்பட்டாலும் சமாளித்துவிடுவீர்கள். தந்தையிடம் எதிர்பார்த்த பண உதவி கிடைக்கும். குடும்பம் தொடர்பான முக்கியமான முடிவு எடுப்பதற்கு உகந்த நாள்.

## மஹோற்சவம்

யாழ்ப்பாணம், ஜூன் 11

தொல்புரம் வழக்கம்பரை அருள்மிகு முத்துமாரி அம்மன் ஆலய வருடாந்த மஹோற்சவம் இன்று செவ்வாய்க்கிழமை மு.ப. 11 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது. எதிர்வரும் 20ஆம் திகதி வியாழக்கிழமை நண்பகல் தேர்த் திருவிழாவும் மறுநாள் வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு தீர்த்தோற்சவமும் இடம்பெறவுள்ளன என ஆலய பரிபாலன சபையினர் தெரிவித்துள்ளனர். (ச)



# இந்தியாவிடம் போராடி தோற்றது பாகிஸ்தான்!

ரி-20 உலகக் கிண்ணத் தொடரின் 19ஆவது ஆட்டத்தில் பாகிஸ்தான் அணியை 6 ஓட்டங்களால் வெற்றிகொண்டது இந்திய அணி.

நியூயோர்க்கில் இடம்பெற்ற இந்தப் போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற பாகிஸ்தான் அணி முதலில் களத்தடுப்பைத் தேர்ந்தெடுத்தது.

முதலில் துடுப்பெடுத்தாடிய இந்தியஅணி 19 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 119 ஓட்டங்களைப் பெற்றது. இந்திய அணி சார்பாக அதிகபட்சமாக ரிசப் பன்ட் 42 ஓட்டங்களைப் பெற்றார்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணி 20 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் 7 விக்கெட்டுகளை இழந்து 113 ஓட்டங்களைப் பெற்றது. பாகிஸ்தான் அணி சார்பாக மொகமட் ரிஸ்வான் 31 ஓட்டங்களைப் பெற்றார். (எ)

# ஓமானை வீழ்த்தியது ஸ்கொட்லாந்து



ரி-20 உலகக் கிண்ணத் தொடரின் 20 ஆவது ஆட்டத்தில் ஓமான் அணியை 7 விக்கெட்டுகளால் வீழ்த்தியது ஸ்கொட்லாந்து அணி.

நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற ஓமான் அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது.

முதலில் துடுப்பெடுத்தாடிய ஓமான் அணி 20 பந்துப்பரிமாற்றங்களில் 7 விக்கெட்டுகளை இழந்து 150 ஓட்டங்களைப் பெற்றது.

151 என்ற வெற்றி இலக்கை நோக்கித் துடுப்பெடுத்தாடிய ஸ்கொட்லாந்து அணி 13:1 பந்துப்பரிமாற்றங்களில் 3 விக்கெட்டுகளை இழந்து 153 ஓட்டங்களைப் பெற்று வெற்றிபெற்றது. (எ)



# முச்சக்கரவண்டிகளில் அவசர தொடர்பிலக்கம்

கிளிநொச்சி, ஜூன் 11

'போதையற்ற இலங்கையைக் கட்டி எழுப்புவோம்' எனும் தொனிப்பொருளில் கிளிநொச்சி பொலிஸார் முன்னெடுத்து வரும் போதைப்பொருள் எதிர்ப்பு விழிப்புணர்வின் ஓர் அங்கமாக முச்சக்கர வண்டிகளுக்கு '107' என்னும் அவசர தொலைபேசி இலக்கம் பொறிக்கும் நிகழ்வு, கிளிநொச்சி பொலிஸ் நிலையம் முன்பாக இடம்பெற்றது.

போதைப்பொருள் விற்பனை செய்யும் நபர்களை இனங்கண்டதும் உடனடியாக '107' என்ற அவசர தொலைபேசி இலக்கத்தைத் தொடர்பு கொண்டு பொலிஸாருக்குத் தகவலை வழங்கும் வகையில் இந்தத் திட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது. (ப-113)

# நாகர்கோயில் நாகதம்பிரான் இராஜகோபுர அடிக்கல் நிகழ்வு

வடமராட்சி, ஜூன் 11

வடமராட்சி கிழக்கு நாகர்கோயில் நாகதம்பிரான் ஆலயத்தில் அமைக்கப்படவுள்ள பஞ்சதள இராஜகோபுரத்துக்கான அடிக்கல் நடும் நிகழ்வு எதிர்வரும் 16ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு இடம்பெறவுள்ளது.

அன்று அதிகாலை 5.30 மணிக்கு விநாயகர் வழிபாடு இடம்பெற்று கணபதி ஹோமம், சாந்தி, சங்குப்பூசையைத் தொடர்ந்து முற்பகல் 10 மணிக்கு சங்கு ஸ்தாபனம் ஆரம்பமாகி நடைபெறும்.

தங்கள் கைகளால் சங்கு ஸ்தாபனம் செய்யும் அடியார்கள் 10 ஆயிரம் ரூபாவை காணிக்கையாக வழங்கி சங்கு ஸ்தாபனம் செய்யலாம் என ஆலயத்தினரால் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



## '13' தமிழர் கோரிக்கையல்ல!

தனது ஆட்சியில் 13 ஆவது திருத்தம் முற்றாக நடைமுறைப்படுத்தப்படும் என்று வடமாகாணத்துக்கான தனது பயணத்தின்போது அறிவித்திருக்கின்றார் எதிர்க்கட்சித் தலைவரான சஜித். அரசியல் ரீதியாகவும், சமூகரீதியாகவும், சமயரீதியாகவும் மக்கள் தங்களின் உரிமைகளைப் பெற்றுக்கொள்ள எங்களின் ஆட்சியில் எந்தத் தடையும் இல்லை என்றும் அவர் அறிவித்திருக்கின்றார். 13 ஆவது திருத்தமென்பது பாலும் தேனும் பாய்ந்தோடும் தீர்வல்ல. இந்தப் புரிதலை தமிழர்கள் தமக்குள் வலுவாகவே கொண்டிருக்கின்றனர். 1987 ஆம் ஆண்டு இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின் அடிப்படையில், ஒற்றையாட்சிக் கட்டமைப்புக்குள் உருவாக்கப்பட்டதே 13 ஆவது திருத்தம். அந்தத் திருத்தச் சட்டம் கொண்டுவரப்பட்ட இடைப்பட்ட 37 ஆண்டுகளில் பல விடயங்கள் கொழும்பால் தன்னிச்சையாக மீளப்பெறப்பட்டிருக்கின்றன. இலங்கையின் உயர் நீதிமன்றம்கூட 13ஆவது திருத்தத்தில் கொழும்பு அரசால் அதிகாரங்கள் பறிக்கப்பட்டது சரி என்றே வியாக்கியானம் செய்திருக்கின்றது. ஒற்றையாட்சிக்கு உட்பட்டே 13 ஆவது திருத்தம் இருப்பதால் கொழும்பு அரசால் எந்தவொரு விடயத்தையும் தான்தோன்றித்தனமாகச் செயற்படுத்தமுடியும்.

இவ்வாறானதொரு நிலையில், தான் ஜனாதிபதியானால், 13 ஆவது திருத்தத்தை முற்றாக நடைமுறைப்படுத்தி, அதிகாரங்களை மாகாணங்களுக்கு முற்றாகப் பகிர்வதாக சஜித் தெரிவித்திருப்பதானது, தமிழர்கள் மீது அவர் கொண்டிருக்கும் 'குறைமதிப்பிடலின்' வெளிப்பாடே. 13 ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்தினால், அதைத் தீர்வாகத் தமிழர்கள் ஏற்றுக்கொள்வார்கள் - அடங்கிவிடுவார்கள் என்று சஜித் கொண்டிருக்கும் ஆழமான நம்பிக்கையின் பிரதிபலிப்பாகவும் கிளிநொச்சியில் வைத்து அவர் வெளிப்படுத்திய கூற்றுகள் அமைந்திருக்கின்றன. அத்துடன், வரவிருக்கும் ஸ்ரீலங்கா ஜனாதிபதித் தேர்தலில் புதுடில்லியின் அரவணைப்பைப் பெற்றுக்கொள்வதற்கு சஜித் கொண்டுள்ள முனைப்பாகவும் இந்த அறிவிப்பைக் கொள்ளலாம். ஆதலால், இந்தியா இனியும் 13ஆவது திருத்தம் என்று ஒற்றையாட்சிக்கு உட்பட்ட தீர்வையே திரும்பத் திரும்ப ஒரே பல்லவி போன்று பாடிக்கொண்டிராமல் தனது கொள்கை நிலைப்பாட்டில் மாற்றத்தை ஏற்படுத்தவேண்டும். 36 ஆண்டுகளுக்கு முன்னால் உருவாக்கப்பட்ட 13 ஆவது திருத்தச் சட்டம் தமது கண்முன்னாலே கொழும்பு அரசால் எவ்வாறு கறையான்புற்றுப் போன்று அரிக்கப்பட்டு எதுவுமில்லாது ஆக்கப்பட்டுள்ளது என்பதை உணர்ந்தாவது, ஒற்றையாட்சிக்கு உட்பட்ட எதுவும் சாத்தியமில்லை என்பதை ஏற்றுக்கொண்டு அடுத்தகட்டத்துக்கு இந்தியா நகர வேண்டும்.

36 ஆண்டுகளாக மாறாத சிங்கள தேசத்தின் மனநிலை இனியும் மாறுமா என்பது கேள்விக்குறியே. சிங்கள தேசம் புறஅழுத்தம் காரணமாக தமிழ் மக்களுக்கு எதை வழங்கினாலும் அதை அந்த அழுத்தம் நீங்கியதும் மீளப்பறித்துக்கொள்ளும் என்பதாலேயே தமிழ் மக்கள் தனிநாடு கேட்டுப்போராடினார்கள். இப்போதும் சிங்கள தேசத்தால் மீளப்பறிக்க முடியாத அதிகாரத்தைக் கோருவதற்கும் அதுவே காரணம். ஆதலால், 13 தொடர்பான எந்த அறிவிப்பும் தமிழர்களை மயக்காது. அந்த அறிவிப்பை தமிழ்ச் சமூகம் ஏற்காது. நோய் எதுவோ அதற்குத்தான் தீர்வு தேவை.




நாணயநிதியத்துக்கு வழங்கிய

## 25 வீத வாக்குறுதிகளை நிறைவேற்றாத இலங்கை

கொழும்பு, ஜூன் 11

**சர்வதேச நாணயநிதியம் இலங்கைக்கான மூன்றாவது நிதிக் கொடுப்பனவு ஒப்பந்தத்தில் கைச்சாத்திடவுள்ளபோதும், இலங்கை தனது பொருளாதார மீட்புக்கான அடிப்படை நல்லாட்சியை முன்னேற்றத் தவறியுள்ளது என்று வெரிட்டே நிறுவனத்தின் ஐ.எம்.எப். கண்காணிப்பாளர் அறிக்கை கூறுகின்றது.**

கடந்த ஆண்டு டிசெம்பர் மாதம் புதுப்பிக்கப்பட்ட திட்டத்தின்படி முடிக்கப்படவேண்டிய 63 வாக்குறுதிகளில் 32 வாக்குறுதிகள் நிறைவேற்றப்பட்டும், 16 வாக்குறுதிகள் நிறைவேற்றப்படாமலும், 15 வாக்குறுதிகள் அறியப்படாமலும் உள்ளன என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்படுகின்றது. அத்துடன் புதுப்பிக்கப்பட்ட திட்டத்தின்படி 25 வீத வாக்குறுதிகள் நிறைவேற்றப்படவில்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. ஐ.எம்.எப். திட்டத்தால் பொருளாதார நெருக்கடியின் மூல காரணங்களாக கண்டறியப்பட்ட நிதி வெளிப்படைத் தன்மை மற்றும் ஊழல் எதிர்ப்பு என்பவற்றை இலங்கை நிறைவேற்றவில்லை என்றும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (எ-இ)

## டெங்குத்தொற்றால் 9 பேர் உயிரிழப்பு!



கொழும்பு, ஜூன் 11

கடந்த ஜனவரி மாதம் முதல் நேற்றுமுன்தினம் வரை நாட்டில் 25 ஆயிரத்து 799 டெங்குத் தொற்றாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர் என்று தேசிய டெங்குக் கட்டுப்பாட்டுப் பிரிவு தெரிவித்துள்ளது. அதேவேளை, இந்த ஆண்டு டெங்குத் தொற்றால் இதுவரை 9 பேர் உயிரிழந்துள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. டெங்குப் பரவல் தொடர்பாக விசேட கவனம் செலுத்த வேண்டும் என்று தேசிய டெங்குக் கட்டுப்பாட்டுப் பிரிவின் பணிப்பாளர் மருத்துவர் சுதத் சமரவீர தெரிவித்தார். (எ-இ)

## பொசனுக்கு விசேட பஸ் சேவை

பொசன் பண்டிகைக் காலத்தில் விசேட பஸ் சேவைகள் முன்னெடுக்கப்படவுள்ளன என இலங்கைப் போக்குவரத்துச்சபை வெளியிட்டுள்ளது. கொழும்பு, கம்பஹா உள்ளிட்ட நகரங்களில் இருந்து மிஹிந்தலை, தந்திரிமலை மற்றும் அநுராதபுரம் ஆகிய பகுதிகளுக்கு இந்த பஸ் சேவையை முன்னெடுப்பதற்குதீர்மானிக்கப்பட்டுள்ளது. (எ-இ)



## துப்பாக்கிச்சூட்டில் ஒருவர் சாவு!

கொழும்பு, ஜூன் 11

அம்பாந்தோட்டை, ரன்ன பிரதேசத்தில் நடந்த துப்பாக்கிச்சூட்டில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

கட்டுமானப் பொருள்கள் விற்பனை செய்யும் கடையொன்றின் உரிமையாளரே உயிரிழந்தவராவார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக ஹுங்கம பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (எ-இ)



## 60 கிலோ கஞ்சாவுடன் இளைஞர் கைது

யாழ்ப்பாணம், ஜூன் 11

சுமார் ஒரு கோடி ரூபா பெறுமதியான கேரளக் கஞ்சாவுடன் வடமராட்சி வல்லிபுரம் காட்டுப்பகுதியில் ஒருவர் கடந்த சனிக்கிழமை கைது செய்யப்பட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. 29 பொதிகளில் 60 கிலோ கஞ்சா கைப்பற்றப்பட்டுள்ளது என்றும், வத்திராயன் வடக்கைச் சேர்ந்த 25 வயதுடைய ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. மீட்கப்பட்ட கஞ்சாவும் கைதுசெய்யப்பட்டவரும் பருத்தித்துறை பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். (எ-100)

### நாளை

12.06.2024

**புதன்கிழமை**

**வைகாசி - 30**

சுபநேரம் : 04.22 - 05.52

ராகுகாலம் : 11.52 - 01.22

### நாளொரு நல்வார்த்தை

**எந்தத் தடையுமே இல்லாமல் ஒரு பாதை
செல்கிறது என்று சொன்னால்
அது எங்கேயும் போகவில்லை
என்று தான் அர்த்தம்.**

**- கலீல் ஜிப்ரான் -**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐரோப்பிய தேர்தல் எதிரொலி

# நாடாளுமன்றத்தை கலைத்தார் மக்ரோன்



**பாரிஸ், ஜூன் 11**

**பிரான்ஸ் ஜனாதிபதி இம்மானுவேல் மக்ரோன் அந்தநாட்டு நாடாளுமன்றம் கலைக்கப்படுகின்றது என்று அறிவித்துள்ளதுடன், பொதுத்தேர்தலுக்கும் அழைப்பு விடுத்துள்ளார்.**

ஐரோப்பிய ஒன்றியத் தேர்தல்களில் தனது கட்சி பின்னடைவான முடிவுகளை சந்தித்ததை அடுத்து ஒரு விரைவான தேர்தலுக்கு அவர் அழைப்பு விடுத்துள் ளார்.

மரைன்லு பென்னின் தீவிர வலதுசாரி தேசியப் பேரணிக் கட்சி பிரான்சில் ஐரோப்பிய நாடாளுமன்ற வாக்குகளில் சுமார் 32 வீத வெற்றியைப் பதிவு செய்துள்ளது. இது மக்ரோனின் மையவாத, ஐரோப்பிய சார்பு மறுமலர்ச்சிக் கட்சி பெற்றுக்கொண்ட 15 வீதத்துக்கும் குறைவான வாக்குகளைவிட இரண்டு மடங்கு அதிகமாகும்.

'எதுவும் நடக்கவில்லை என்று பாசாங்கு செய்யமுடியாது' எனக் கூறியுள்ள மக்ரோன் ஐரோப்பிய ஒன்றியத் தேர்தல் முடிவு தனது அரசாங்கத்துக்கு 'நல்ல தல்ல' என்றும் ஒப்புக்கொண்டுள்ளார். பிரான்சில் எதிர்வரும் 30ஆம் திகதி மற்றும் அடுத்த மாதம் 7ஆம் திகதிகளில் இரண்டு சுற்று வாக்குப்பதிவு நடைபெறும் என்று ஜனாதிபதி இம்மானுவேல் மக்ரோன் அறிவித்துள்ளார். அதே வேளை, பிரான்ஸ் ஜனாதிபதியின் இந்த அறிவிப்பு பெரும் ஆச்சரியம் அளிக்கின்றது என்று அந்நாட்டின் அரசியல் விஞ்ஞானி டொமினிக் மொய்சி சுட்டிக்காட்டி யுள்ளார்.

"பிரான்ஸில் ஒலிம்பிக் போட்டிகள் இடம்பெறுவதற்கு இன்னும் சில வாரங்களே இருக்கும் நிலையில், ஜனாதிபதி நாடாளுமன்றத்தை கலைக்க முடிவு செய்வார் என்று யாரும் எதிர்பார்க்கவில்லை" என அவர் தெரிவித்துள்ளார்.

(ஏ-இ)


### வேலையாட்கள் தேவை

1. தொழிநுட்ப உத்தியோகத்தர் (TO)
   HND or NCT-Civil/Qs NVQ Level with preparing Bill.
2. கணிய அளவையியலாளர் (QS)
   HND or NCT-Civil/Qs NVQ Level with preparing Bill.
3. கணக்காளர் (Accountant)
4. கணக்கு உதவியாளர் (Accountant Assistant)
5. அலுவலக உதவியாளர் (Office Assistant)

Mail: shaganaconstruction@hotmail.com
(காலை 8.00-மாலை 5.00 வரை)
யாழ்ப்பாணம்.

தொடர்புகளுக்கு: 077 210 0749

(CS 721)V-1



### மரண அறிவித்தல்

**இராசா நேசமலர்**



தோற்றம் 16.10.1938 — மறைவு 09.06.2024

தம்பாலை அச்சுவேலியை பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட இராசா நேசமலர் அவர்கள் இறைபதம் அடைந்துவிட்டார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்
சபா லேன்,
தம்பாலை, அச்சுவேலி.

(CS 723)A-1


## தேர்தலுக்கான கொள்கையை வெளியிட்டது கென்சர்வேடிவ்!

பிரித்தானியாவில் அடுத்த மாதம் பொதுத் தேர்தல் இடம்பெறவுள்ள நிலையில் கென்சர்வேடிவ், தொழிற்கட்சி மற்றும் லிப் டெம்ஸ் ஆகிய கட்சிகள் தங்கள் பொதுத்தேர்தல் அறிக்கையை வெளியிடுவதற்கு முன்னதாகப் புதிய கொள்கைகளை அறிவித்துள்ளன.

கென்சர்வேடிவ் பொதுத்தேர்தலில் வெற்றிபெற்றால், உயரும் பொதுநலச் செலவுகளைக் குறைக்கும் நடவடிக்கைகளின் ஒரு பகுதியாக, இங்கிலாந்தில் மனநல சிகிச்சையை விரிவுபடுத்தசுமார் 730 மில்லியன் ஸ்ரேலிங் பவுண்ட் வழங்கப்படும் என்று உறுதியளித்துள்ளனர்.

5 இலட்சம் பேருக்கு ஆலோசனைச் சேவைகள் போன்ற சிகிச்சைகளுக்கு நிதியளிப்பது, அதிக உழைக்கும் வயதினருக்கு வேலை வாய்ப்பை உறுதி செய்வதனூடாக வருடமொன்றுக்கு 12 பில்லியன் ஸ்ரேலிங் பவுண்டை சேமிக்க உதவும் என அந்த கட்சி தெரிவித்துள்ளது.

தொழில் என்பது கண்ணியம், நோக்கம் மற்றும் நம்பிக்கை ஆகியவற்றின் ஆதாரமாகும். சுதந்திரமான, நிறைவான வாழ்க்கையை வாழ்வதற்கு அவர்கள் எதிர்கொள்ளும் தடைகளை அனைவரும் கடக்கவேண்டும் என்று நான் விரும்புகிறேன் என்று ரிஷி சுனக் தெரிவித்துள்ளார்.

(ஏ-இ)


### வேலைக்கு ஆட்கள் தேவை

கொடிகாமத்தில் இயங்கும் எமது கடைக்கு வேலைக்கு ஆட்கள் தேவை.
சங்கத்தானை, மீசாலை, கொடிகாமம் பகுதியைச் சேர்ந்தவர்கள் விரும்பத்தக்கது.
பெண்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்
தொடர்புகளுக்கு:
077 989 8190, 075 475 7056



### வேலையாட்கள் தேவை

1. மேசன் - Rs. 2500.00 - 3000.00
2. மேசன் உதவியாளர் - Rs. 2000.00 - 2500.00
3. பெயின்ரர் - Rs. 2500.00
4. பெயின்ரர் உதவியாளர் - Rs. 2000.00
5. வெல்டர் உதவியாளர் - Rs. 2000.00
6. வயறிங் - Rs. 2500.00 - 3000.00
7. பிளமிங் - Rs. 2500.00 - 3000.00
8. தச்சுவேலை (அனுபவமுள்ளவர்கள்) - Rs. 2500.00 - 3000.00

(தேவைப்படின் தங்குமிடம், உணவு ஒழுங்கு செய்து தரப்படும்.)

தொடர்பு : 077 210 0749
(காலை 7.00 - மாலை 6.00 வரை)
யாழ்ப்பாணம்.


### கேள்வி அறிவித்தல்
### சபை நிதி மற்றும் பராமரிப்பு வேலைத்திட்டங்கள் - 2024
### பச்சிலைப்பள்ளி பிரதேச சபை, பளை.

01. பச்சிலைப்பள்ளி பிரதேச சபையின் சபை நிதி மற்றும் பராமரிப்பு நிதிகளின் ஒரு பகுதி குறித்த வேலைத்திட்டத்திற்கான கொடுப்பனவுக்கென பயன்படுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

02. **பச்சிலைப்பள்ளி பிரதேச சபை, பளை** சார்பாக தகுதி வாய்ந்த ஒப்பந்தகாரர்களிடமிருந்து அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகளை கீழ்க்காட்டப்பட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்ட கட்டுமான வேலைகளுக்காக கோருகின்றார்.

03. விலைக் கேள்வியானது தேசிய போட்டி விலைக் கேள்வி கோரல் நடைமுறைக்கு அமைவாகவே கேள்வி கோரப்படுகின்றது.

04. கேள்விபெறத் தகுதியுடையவராவதற்கு. வெற்றிபெறும் விலைக்கேள்வியாளர் கறுப்புப் பட்டியலில் (Black List) சேர்த்துக் கொள்ளப்படாதவராகவும், அட்டவணையில் காட்டியபடி பொருத்தமான தரத்தில் வீதி மற்றும் கட்டுமான அமைப்புக்கான சிடா (CIDA) பதிவு மேற்கொள்ளப்பட்டிருத்தல் வேண்டும்.

05. தேவையான தகைமைகள் விலைக்கேள்வி ஆவணத்தில் பகுதி 04 (Section IV) இலும் மேலதிக தகவல்கள் தரவு அட்டவணை (Schedule) இலும் உள்ளடக்கப்பட்டுள்ளது.

06. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் **பச்சிலைப்பள்ளி பிரதேச சபை, பளை (தொலைபேசி 021-205-0037, தொலைநகல் 021-205-0036, E-Mail: pallaips@gmail.com)** இல் இருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்ளலாம். அத்துடன் மேற்கூறிய இடத்தில் வேலைநாட்களில் காலை 09.00 மணி முதல் 15.00 மணி வரை 11.06.2024 ஆம் திகதியிலிருந்து 24.06.2024 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் கேள்வி ஆவணங்களை பார்வையிடலாம்.

07. ஆர்வமுள்ள கேள்விதாரர் **பச்சிலைப்பள்ளி பிரதேச சபை, பளை** எனும் இடத்திலிருந்து 11.06.2024 .ஆம் திகதியிலிருந்து 24.06.2024 ஆம் திகதி வரை அலுவலக நாட்களில் மட்டும் காலை 09.00 மணிக்கும் 15.00 மணிக்கும் இடையில் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா.2,000/- (வரி நீங்கலாக) செலுத்தி பெற்றுக்கொள்ளலாம். இத்தொகை பணமாகச் செலுத்தப்படல் வேண்டும்.

08. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் பூரணமான கேள்வி ஆவணமொன்றை ஆங்கில மொழியில் இரு பிரதிகளில் தயாரித்து **தலைவர், பெறுகைக்குழு, பச்சிலைப்பள்ளி பிரதேச சபை, பளை** எனும் முகவரிக்கு 25.06.2024 திகதி மாலை 14.00 மணிக்கு முன்பதாக கிடைக்கக் கூடியதாக அனுப்பிவைக்கப்பட வேண்டும். பிந்திய கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது, கேள்வி நேரம் முடிவடைந்த உடனேயே வருகை தரும் கேள்விதாரர் அல்லது அவர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.

09. கேள்விப் பிணைவைப்புத் தொகையானது கீழே அட்டவணையிற் காட்டப்பட்டவாறு அமையும்

| கேள்வி இலக்கம் அடையாள | வேலை விபரம் | நிதி மூலம் | மதிப்பீட்டுத் தொகை VAT நீங்கலாக (Rs Mn) | ஒப்பந்த காலம் | வேண்டப்படும் தரம் (Roads) | வேண்டப்படும் கேள்விப் பிணை | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | பிணை வைப்பு (Rs) | செல்லுபடியாகும் காலம் |
| NP/14/45(3)/PL/PSDG/ W/04/2024 | Renovation of Paththavalai Main Road | Maintenance | 1.27 Mn | 45 நாட்கள் | C9 and C8 | 20,000.00 | 10.09.2024 |
| NP/14/45(3)/PL/PSDG/ W/05/2024 | Renovation of Kottandarkulam Road | Maintenance | 3.38Mn | 45 நாட்கள் | C8 and C7 | 50,000.00 | 24.09.2024 |
| NP/14/45(3)/PL/CF/W/ 07/2024 | Reconstruction of Mullipattu Sub Office Road | Council Fund | 5.59Mn | 60 நாட்கள் | C7 and C6 | 84,000.00 | 08.10.2024 |
| NP/14/45(3)/PL/PSDG/ /W/06/2024 | Renovation of Peralai Main Road | Maintenance | 1.69Mn | 45 நாட்கள் | C9 and C8 | 25,000.00 | 10.09.2024 |

10. கேள்வி கோரல் பற்றிய முன் கூட்டிய கூட்டம் 18.06.2024 திகதி காலை 10.30 மணிக்கு பச்சிலைப்பள்ளி பிரதேச சபை, பளை அலுவலகத் தில் நடைபெறும். ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் கலந்துகொள்ளலாம். இதற்கு எதுவித கொடுப்பனவுகளும் வழங்கப்படமாட்டாது.

11. சமர்ப்பிக்கப்பட்ட கேள்விகளை முழுமையாக அல்லது பகுதியாக நிராகரிக்கவோ, மீள்கேள்வி கோரவோ பெறுகைக்குழு தலைவருக்கு அதிகாரம் உண்டு.

**தலைவர்,**
**பெறுகைக்குழு,**
**பச்சிலைப்பள்ளி பிரதேசசபை, பளை.**

(cr.42629) (N-1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கணபதிதுணை







# சாவகச்சேரி கல்வயல் பெருங்குளம்

# அம்பலவாண வீரகத்தி விநாயகர் தேவஸ்தானம்

## ஸர்வ மங்களம் நிறைந்த குரோதி (2024) வருஷ ப்ரம்மோற்சவம் - சிறப்பிதழ்

**உற்சவ நிகழ்வுகள்**

| | | | |
|---|---|---|---|
| ◆ 12.06.2024 | புதன்கிழமை | - முற்பகல் 10.00 மணி | துவஜாரோகணம் (கொடி ஏற்றம்) |
| ◆ 19.06.2024 | புதன்கிழமை | - இரவு 08.00 மணி | ஸகோபுரவாகனம் (சப்பரம்) |
| ◆ 20.06.2024 | வியாழக்கிழமை | - முற்பகல் 10.00 மணி | இரதோற்சவம் (தேர்) |
| ◆ 21.06.2024 | வெள்ளிக்கிழமை | - முற்பகல் 10.00 மணி | தீர்த்தோற்சவம் (தீர்த்தம்) |
| ◆ 21.06.2024 | வெள்ளிக்கிழமை | - மாலை 06.00 மணி | துவஜ அவரோகணம் (கொடி இறக்கம்) |

**ப்ரதான மஹோற்சவ சிவாச்சாரியார்- சிவஸ்ரீ க.ச. சோமாஸ்கந்தக் குருக்கள்**
**ஸகலாகம பண்டிதர் - பொன்னாலை வரதராஜப்பெருமாள் தேவஸ்தானம்**



ஓம்
கஜானனம் பூதகணாதிஸேவிதம்
கபித்த ஜம்பூ பல ஸார பக்ஷிதம்
உமா சுதம் ஸோக விநாச காரணம்
நமாமி விக்னேச்வர பாதபங்கஜம்.



ஓம்
யானைமுகம் உடையவர். பூதகணங்களால்
போற்றப் படுகின்றவர், கபிலவர்ண நாவல்
பழச் சாற்றினை விரும்பி புஜிப்பவர்
உமை அம்மை பாலகர், எல்லா விக்கினங்களையும்
அழிக்கக் கூடியவர் இவரின் தாமரை
மலர்போன்ற பாதங்களை வணங்குகின்றோம்.



◆ அண்ட சராசரங்களாகிய ஜகத்திற்கு மூலகாரணன், புலன்களால் அறிய இயலாதவர், கற்பனைகளுக்கு எல்லாம் அப்பாற்பட்டவர், ஸர்வக்ஞர், ஸர்வக் கிருத்தர், ஜ்யோதி ரூபமானவர், அமலர் தான் ப்ரம்மம் என்னும் முழுமுதற் **பதி**

◆ மலங்களால் கட்டுண்டு சிற்றறிவும் சிறு தொழிலும் உடைய **பசுக்களே** ஆன்மாக்கள்

◆ பசுக்களாகிய எம்மேல் கொண்ட திருவருள் காரணமாக தனது நிலையில் இருந்து கீழ் இறங்கி (1) நாதம் (2) விந்து (சிவம் - சக்தி) (3) ஸதாசிவம் (சிவலிங்கம்) (4) ஈச்வரம் (5) சுத்தவித்தை (ப்ரம்மா, விஷ்ணு, ருத்ரன்) ஆக வரும் நிலைகளே முதல் ஐந்து தத்துவங்கள் (படிகள்) ஆகிய சிவதத்துவங்கள்.

◆ இந்த நாதமும் விந்துவும் (சிவமும் சக்தியும்) சேர்ந்தரூபமே எமது விநாயகர் - நாதம் - என அடையாளப்படுத்தியும் விந்து O என அடையாளப்படுத்தியும் உ பிள்ளையார் சுழி என போடப்படுகின்றது இந்த சிவசக்தி சொரூபத்தினையேயாகும். இதுவே ப்ரணவத்துள்ளும் ஓம், அ, உ, ம் என அடங்கும்.

ஊமை எழுத்தொரு பேசும் எழுத்து உறில்
ஆமை அகத்தினுள் ஐந்தும் அடங்கும்
ஓம் மயம் உற்றது உள் ஒளி பெற்றது
நா மயம் அற்றது நாம் அறியோமே - **என்பது திருமந்திரம்**

◆ எமது அம்பலவாண வீரகத்தி விநாயகப் பெருமானுக்கு அவரின் படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் ஆகிய பஞ்சகிருத்தியங்களை காரணப்படுத்திக்கொள்ளும் குரோதி வருஷ (2024) ப்ரம்மோற்சவம் 12.06.2024 முற்பகல் 10.00 மணியளவில் துவஜாரோகணத்துடன் ஆரம்பம் ஆக அவரின் கிருபா கடாட்சமே துணை கூட்டி உள்ளது.

◆ "அந்தணர் என்போர் அறவோர்" என அடையாளபடுத்திய "வள்ளுவர்" வாக்கிற்கு அமைவாக வேதங்களை கற்பதற்கும் கற்பிப்பதற்கும் அதிகாரம் உடைய குலமான அந்தணர் குலத்து ச்ரேஷ்டர்களே காலா காலமாக இவ் ஆலயத்து நித்ய நைமித்திக மஹோற்சவ க்ரியா கர்த்தர்களாக இருந்து வருகின்றார்கள். அதன் படியாக "சகலாகம பண்டிதர் சிவஸ்ரீ க.ச. சோமாஸ்கந்தக் குருக்கள் (பொன்னாலை வரதாராஜப் பெருமாள் தேவஸ்தானம்) அவர்கள் மஹோற்சவ சிவாச்சார்யார் ஆக ப்ரம்மோற்சவ கிரியைகள் சிறப்புற நிகழ்தி வைக்க திருவுள்ளம் கொண்டுள்ளார்கள்.

◆ மூலாலயத்தில் மூலமூர்த்தியாக எழுந்துஅருளி அருள் பாலிக்கும் விநாயகப் பெருமான் மஹோற்சவ காலங்களில் **துவஜத்தம்பத்திலும்** (கொடிமரம்) **விம்பம்** ஆகிய உற்சவ மூர்த்தியாகவும், யாக **கும்பத்திலும்** க்ரியாகாரணன் ஆகிய **சிவாச்சாரியரிடத்திலும்** வீற்றிருந்து தரிசிப்பவர்களுக்கு சாம்பவ தீக்ஷையினை அருளி அருள் பாலிக்கின்றார்.

◆ துவஜத்தம்பம் பதியாகி இறைவனையும் மஞ்சல்நிற கொடிக்கயிறு இறைஅருட் சக்தியாகிய சிவஞானத்தினையும் கொடிச்சீலையானது பசுக்களாகிய ஆன்மாக்களையும் தர்ப்பைக் கயிறு பாசமாகிய மலத்தினையும் குறிக்கும். மலங்களால் கட்டுண்ட காரணத்தால் ஆன்மாக்கள் பிறந்து, கர்மங்களில் மேலும் சுழன்று, மலங்களால் இறுகுண்டு இறந்து மீண்டும் இந்த சுழற்சியாக பிறக்கும்.

◆ சிவாச்சரியாரின் அருள் வழி காட்டல் மூலம் பாசக்கட்டுக்களை அறுத்து சிவஞானத்தின் துணையுடன் பதியுடன், இணைந்து பேரின்பப் பெருவாழ்வினைப் பெறுதலே கொடியேற்றம் உணர்த்தும்.

◆ "இருவினையும் மலமும் அற இறவியோடு பிறவி அற ஏக போகமாய் நீயும் நானுமாய் இறுகும்வகை பரமசுகம் அதனை அருள் இடை மருதின் ஏக நாயகா யோக நாயகா இமையவர் பெருமாளே" என்று அருணகிரிநாதர் இந்த நிலையினை குறித்து பாடி உள்ளார்

**கொடிக்கவி**

(1) ஒளிக்கும் இருளுக்கும் ஒன்றே இடம் ஒன்று மேலிடில் ஒன்று ஒளிக்கும் எனினும் இருள் அடராது உள் உயிர்க்கு உயிராய் தெளிக்கும் அறிவு திகழ்ந்து உள்ளதேனும் திரிமலத்தே குளிக்கும் உயிர் அருள் கூடும்படி கொடிகட்டினனே.

(2) பொருளாம் பொருள் ஏது போதேது கண் ஏ (து)
இருளாம் வெளி ஏது இரவு ஏது அருளாளா
நீபுரவா வையம் எல்லாம் நீ அறியக் கட்டினேன்
கோபுர வாசற் கொடி



(3) வாக்காலும் மிக்க மனத்தாம் எக்காலும்
தாக்காத உணர்வு அரிய தன்மையனை நோக்கி
பிறித்து அறிவு தம் மிற் பிரியாமை தானே
குறிக்கும் அருள் நல்லக் கொடி

(4) அஞ்செழுத்தும் எட்டெழுத்தும் ஆறு எழுத்தும் நாலு எழுத்தும்
**(சிவாய நம) (ஓம் ஆம் அம் சிவாய நம) (ஓம் நமசிவாய ஓம் சிவாய)**
பிஞ்சு எழுத்தும் மேலைப் பெருஎழுத்தும் நெஞ்சு அழுத்தி
**(வ) (சி)**
பேசும் எழுத்துடனே பேசா எழுத்தினையும்
**(வ) (சி)**
கூசாமற் காட்டக் கொடி.

தில்லை வாழ் அந்தணர்களில் முதல்வரான உமாபதி சிவாச்சாரியார் பல்லக்கினில் தீவர்த்தி, குடை, கொடி, ஆலவட்டம் சகிதமாக சிதம்பரம் நடராஜர் கோயில் பூஜைகள் முடித்து வீடுதிரும்பும் போது இடையில் கண்ட கீழ் வர்ணத்தவரான மறைஞான சம்பந்த சுவாமிகள் "பட்ட கட்டையினில் பகற் குருடு போகின்றது". என்று கூற அம்மகாவாக்கியத்தினை கேட்ட உமாபதி சிவாச்சாரியார் சிவஞானத்தினை பெற்று அவருக்கு சீடரான படியால் மற்ற தில்லை வாழ் அந்தணர்களால் அவரும் கீழ் வர்ணத்தவர் என்று ஆலயக் கியைகளினின்னும் நீக்கப்பட்டார்.

தொடர்ந்து வந்த மஹோற்சவத்தில் அவர்களால் கொடி ஏற்றப்படும் போது கொடி ஏறாது தடைப்பட்டுக் கொண்டது. நடராஜப் பெருமான் அருட் குறிப்பினால் தமது தவறு உணர்ந்து உமாபதி சிவாச்சாரியாரை கொடி ஏற்றும்படி வேண்டிக் கொண்டார்கள்.

அவர் மேற்கண்ட கொடிக்கவியாகிய சித்தாந்த, மந்திர தத்துவமான பாடலைப் பாட கொடித்தடைநீங்கி தானே மேலேறியது.

இதனையே தற் போதும் கொடி ஏற்றமுன் ஓதி கொடி ஏற்றப்படும்.

அம்பலவாண விரகத்தி விநாயகரின் மெய்யடிவர்கள் இவ்வூர் வாழ்பவர்கள் நேரிலும் வெளியூர், வெளி நாடு வாழ்பவர்கள் வலைத்தளத்திலும் ப்ரம்மோற்சவ நிகழ்வுகளை தரிசித்து சகல செல்வ யோகம் மிக்க பெருவாழ்வு வாழ்வீர்களாகுக என்று பிரார்த்திக்கின்றோம்.

"லோகா ஸமஸ்த ஸுகினோ பவந்து"

**ஆலய தர்மபரிபாலன சபை சார்பாக**

தலைவர்
A.V. முருகதாசன் - கல்வயல்

செயலாளர்
கிருஷ்ணசாமி - கல்வயல்



# ப்ரம்மோற்சவம் சிறப்புற பிரார்த்தனை செய்பவர்கள்

## சாவகச்சேரி பிரபல வர்த்தகர்

# சண்முகம் அண்ட் சன்ஸ் A9, கண்டி வீதி, சாவகச்சேரி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கச்சதீவு விவகாரத்துக்காக மன்னிப்புக் கேட்கவேண்டும்

### மோடியை வலியுறுத்தியது காங்கிரஸ்

புதுடில்லி, ஜூன் 11

இந்திய மக்களவைத் தேர்தல் பரப்புரையின்போது, கச்சதீவு விவகாரம் தொடர்பில் தேவையற்றதும் உண்மைக்குப் புறம்பானதுமான கருத்துகளைத் தெரிவித்தமைக்காக மோடி மன்னிப்புக் கேட்க வேண்டும் என்று இந்திய காங்கிரஸ் வலியுறுத்தியுள்ளது.

இந்திய மக்களவைத் தேர்தலின்போது, தமிழகத்தில் உள்ள மக்களின் வாக்குகளைக் கவர்வதற்காக மோடி கச்சதீவு விவகாரத்தில் எல்லைமீறிய கருத்துகளை முன்வைத்தார். அத்துடன், பொறுப்பற்ற அறிக்கைகளையும் பாரதிய ஜனதாக் கட்சி முன்வைத்தது. இதனால் இலங்கை - இந்தியா இடையிலான உறவில் விரிசலும் பின்னடைவும் வரும் என்றும் இந்திய காங்கிரஸ்கட்சி சுட்டிக்காட்டியுள்ளது. இரண்டு நாடுகள் தொடர்பான தகவல்களை வெளியிடும்போது கண்ணியத்துடனும், இருதரப்பு உறவுகளுக்குப் பங்கம் ஏற்படாத வகையிலும்தான் செயற்படவேண்டும். இதை பா.ஜ.க.வினர் புரிந்துகொள்ள வேண்டும் என்றும் இந்திய காங்கிரஸ் கட்சி மேலும் தெரிவித்துள்ளது. (ம)

## வருடாந்த மஹோற்சவம்

யாழ்ப்பாணம், ஜூன் 11

யாழ்மேலை வண்ணை நகர் அருள்மிகு ஸ்ரீ விசுவேச விநாயகர் ஆலய வருடாந்த மஹோற்சவம், நாளை புதன்கிழமை மு.ப. 11 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

தொடர்ந்து 10 தினங்கள் நடைபெறவுள்ள திருவிழாவின் இரதோற்சவம் எதிர்வரும் 20 ஆம் திகதி காலை 8.30 மணிக்கு வசந்த மண்டபப் பூசை நடைபெற்று, மு.ப. 10 மணிக்கு எம்பெருமான் தேரில் ஆரோகணிப்பார். மறுநாள் தீர்த்தோற்சவம் மு.ப.10 மணிக்கும் இடம் பெறுமென ஆலய பரிபாலனசபையினர் தெரிவித்துள்ளனர். (ப)

## விருந்தினர் இல்லத் திறப்பு விழா

சுன்னாகம், ஜூன் 11

வாழ்வகம் சபாபதிப்பிள்ளை வீதியில், வாழ்வக அன்னை கலாநிதி அன்னலட்சுமி சின்னத்தம்பி அம்மையாரின் ஆசியுடன், வாழ்வக விருந்தினர் இல்லத் திறப்பு விழா, நாளை புதன் கிழமை காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது. நிகழ்வில் வாழ்வகத்தின் வாழ்நாள் தலைவர் ஆறுமுகம் ரவீந்திரன் விருந்தினர் இல்லத்தைத் திறந்துவைக்க வுள்ளார். (ப)


இணைப்ப இணையத்தளம் வழங்கும் அடுத்த தலைமுறை திருமண சேவை

தமிழ் உலகிலேயே முதன் முறையாக நவீன தொழில்நுட்பங்கள் கொண்டு அறிமுகமாகின்றது இணைப்ப நவீன திருமண சேவை. ஏராளமான உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு வரன்களை உங்கள் தெரிவிற்கேற்ப அணுகி, தொடர்பு கொண்டு உங்கள் துணையை தெரிவுசெய்யமுடியும்.

பதிவுக் கட்டணம் இல்லை இப்பொழுதே இணையுங்கள் இணைப்பவுடன்

Ts&Cs apply
Www.inaipa.com


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



கடந்த 24.05.2023 புதன்கிழமை இறைபதமடைந்த
எமது குடும்பத் தலைவர்

**அமரர் சங்கரப்பிள்ளை புவனேஸ்வரன்**

(இலங்கையில் வெளிவந்த தமிழ் திரைப்படமான வெண்சங்கு திரைப்படத்தின் கதாநாயகன்)

அவர்களின் முதலாம் ஆண்டு நினைவஞ்சலி இன்று (11.06.2024) செவ்வாய்க்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்பசகிதம் வருகைதந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத்தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்

இல.55, மணற்தரை வீதி,
கந்தர்மடம்.

குடும்பத்தினர்

(cs671) (N.1)

## கண்ணீர் அஞ்சலி



தோற்றம் 15.11.1956 — மறைவு 04.06.2024

எமது அலுவலகத்தில் கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தராக கடமையாற்றும் **மாதுகா வரதராசா** அவர்களின் அன்புத் தாய்

**திருமதி ஜராங்கனி வரதராசா**

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பிரிவால் துயருறும்:
யாழ். மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி
உதவி ஆணையாளர்
அலுவலக உத்தியோகத்தர்
நலன்புரிக் கூட்டுறவுச் சங்கம்

(CS/55335) J-1

## பெயர் மாற்றம்

இந்திரம்மன் கோவிலடி, துன்னாலையில் வசிக்கும் கந்தசாமி சுகிந்தராணி ஆகிய நான் இன்று முதல் எனது பெயரை சுகிர்தராணி என மாற்றம் செய்வதோடு சகல ஆவணங்களிலும் அவ்வாறே கையொப்பமிடுவேன் என இலங்கை சோசலிச குடியரசு மக்களுக்கு அறியத் தருகின்றேன்.

உண்மையுள்ள
சுகிர்தராணி

(CS/28135) J-1

## ஆதன பெயர் மாற்றம்

யாழ். மாநகரசபைக்குட்பட்ட வட்டாரம் - 24, மார்டீன் ஒழுங்கை, 21 A ஆதன இலக்கத்தை கொண்ட ஆதனம் விக்டர் ஜோன்பிள்ளை என்ற பெயரில் யாழ். மாநகரசபை ஆதனப்பதிவேட்டில் காணப்படுகின்றது.

இதன் கீழ் அட்டவணையில் நன்கு விபரிக்கப்படும் ஆதனம் விஸ்வலிங்கம் கந்தையா கைம்பெண் பொன்னு 02.10.1971 திகதியிட்டு பிரசித்த நொத்தாரிசு E. கோபாலசிங்கம் முகதாவில் 126 ஆம் இலக்கத்தில் நிறைவேறிய நன்கொடை உறுதி மூலம் அவரது மகளான விஸ்வலிங்கம் கந்தையா மகள் சிவபாக்கியம் என்பவரிற்கு நன்கொடை வழங்கியுள்ளார்.

பின்னர் குறித்த ஆதனத்தை இராமசாமி பெருமாளும் பெண் சிவபாக்கியம் உம் 22.03.1982 திகதியிட்டு பிரசித்த நொத்தாரிசு பசுபதிப்பிள்ளை கதிரவேலு முகதாவில் 11224 ஆம் இலக்கத்தில் நிறைவேறிய நன்கொடை உறுதிமூலம் கந்தையா செல்வலிங்கம் உம் பெண் தனபாக்கியலெட்சுமியும் என்பவரிற்கு நன்கொடையாக வழங்கியுள்ளார்.

பின்னர் குறித்த ஆதனத்தை கந்தையா செல்வலிங்கம் கைம்பெண் தனபாக்கியலொட்சுமியும், செல்வலிங்கம் சஞ்சிவலிங்கம் உம், செல்வலிங்கம் இராஜலிங்கம் உம், 17.03.2014திகதியிட்டு பிரசித்த நொத்தாரிசு திருமதி சறோஜினிதேவி இளங்கோவன் முகதாவில் 9793 ஆம் இலக்கத்தில் நிறைவேறிய நன்கொடை உறுதிமூலம் செல்வலிங்கம் இரட்ணலிங்கம் என்பவரிற்கு நன்கொடை வழங்கியுள்ளார்.

பின்னர் குறித்த ஆதனத்தை செல்வலிங்கம் இரட்ணலிங்கம் 12.05.2018 திகதியிட்டு பிரசித்த நொத்தாரிசு சிவசுப்பிரமணியம் ஜோதிலிங்கம் முகதாவில் 262 ஆம் இலக்கத்தில் நிறைவேறிய அறுதி உறுதி மூலம் பத்மநாதன் கைம்பெண் யோகலெட்சுமி என்பவரிற்கு அறுதியாக வழங்கியுள்ளார்.

### ஆதன அட்டவணை

வடமாகாணம் யாழ்ப்பாண மாவட்டம் யாழ்ப்பாணப் பகுதி சுண்டுக்குளி கோவிற்பற்று யாழ்ப்பாணப் பிரதேச செயலகம் யாழ்ப்பாணம் மாநகர சபை, சுண்டுக்குளி இறை யாழ் நகர் கிழக்கு J/74 கிராம அலுவலர் பிரிவு "நரிஞ்சித்தறை" நில.பர ஒன்றும் (01) குளி ஒன்று தசம் ஒன்றும் (1.1) வீடும், கிணறும், செய்பயிர், வான்பயிர்களும் இதடங்கலிற் சொரியலாய் நன்கொடை ஏற்பவரின் பாகம் உட்பட 9/10 பங்கிற்காக மறுபங்காளருடன் மனமொத்து அளவின்படியும் ஆட்சியின்படியும் நில.பர 01. குளி 2.47 ஆட்சி செய்து வரப்படுகின்றது. இது உத்தரவு பெற்ற நில அளவையாளர் ரி. தங்கராஜா அவர்களின் 2018.05.07 ஆம் திகதிய 10068 ம் இலக்க வரைபடத்தில் துண்டு 01 எனக் காட்டப்பட்டுள்ளது. இந்த நில.பர 01 குளி 2.47 ற்கும் எல்லைகள்

- கீழ்க்கு - மைக்கல் செபமாலை கைம்பெண் இரத்தினத்தின் ஆதனம்
- வடக்கு - பத்நாதன் ரங்கநாதனின் ஆதனம்
- மேற்கு - மார்டீன் ஒழுங்கை
- தெற்கு - பத்மநாதன் மகள் தர்மினியின் ஆதனம்

இதன் மிகுதிக்காணிக்குள் இருக்கும் கிணற்றில் இதற்குரிய தண்ணீர் பங்கும் வழிவாய்க்கால் உரித்தும்.

தற்போது யோகலெட்சுமி பத்மநாதன் இவ்வாதனத்தை தனது பெயரிற்கு எமது பதிவேட்டில் பெயர் மாற்றம் செய்ய விண்ணப்பித்துள்ளார். எனவே இவ் ஆதனத்தின் ஏதேனும் ஒரு பகுதிக்கு /முழுமையாகவோ உரிமை கோருபவர் யாராவது இருப்பின் பத்திரிகையில் பிரசுரித்த திகதியிலிருந்து ஒரு மாத காலத்திற்குள் உறுதிப்படுத்தப்பட்ட ஆவணங்களுடன் எழுத்து மூலம் அறியத்தருமாறும் உரிமை கோராதவிடத்து குறித்த அதனமானது யோகலெட்சுமி பத்மநாதன் என்னும் பெயர்களிற்கு பெயர்மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும். இவ் ஆதனம் பெயர்மாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் யாழ்ப்பாணம் மாநகரசபை பொறுப்பாளி அல்ல என்பதை தெரிவித்துக்கொள்கின்றேன்.

**ஆணையாளர் மாநகர சபை.**
**யாழ்ப்பாணம்.**

(cr.42624) (N-1)

## நன்றி நவிலலும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனை அழைப்பும்.



**கோப்பாய் விரபத்திரர் கோவில் பிரதமகுரு**

**சிவஸ்ரீ சோ.இ. பிரணதார்த்திஹர குருக்கள்**

எமது அன்புத் தந்தையின் மறைவுச் செய்திகேட்டு உடன் ஓடிவந்து ஆறுதல் தெரிவித்து உதவிகள் புரிந்த அன்பு உள்ளங்களுக்கும், கண்ணீர் அஞ்சலிகள், இரங்கல் உரைகள் செய்த அனைத்து அன்பர்களுக்கும், அப்பாவின் இறுதி யாத்திரையின் போது தோழ் கொடுத்த அனைவருக்கும் கடினமான இந் நாட்களை கடக்க உதவிய அப்பாவின் நண்பர்கள், அபிமானிகள் அன்புறவுகள் அனைவருக்கும் எம்முடனும் எம் தந்தையுடனும் தொடர்பில் உள்ள அனைத்து ஆலய நிர்வாக சபையினர், அடியார்கள், ஊர்மக்கள் அனைவருக்கும் எம் கரம் கூப்பி நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனை நாளை (12.06.2024) புதன்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெறும். இந் நிகழ்விலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் அன்பர்கள், நண்பர்கள், அபிமானிகள் ஊர்மக்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

வீரபத்திரர் கோவில்,
கோப்பாய்.

குடும்பத்தினர்

(CS/55338) J-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்



தோற்றம் 04 . 08 . 1937

மறைவு 07 . 06 . 2024

## விஸ்வலிங்கம் சிவபாக்கியம்

அளவெட்டி மாசியப்பிட்டியைப் பிறப்பிடமாகவும், சாவகச்சேரி சங்கத்தானையை வசிப்பிடமாகவும் கொண்ட விஸ்வலிங்கம் சிவபாக்கியம் (முத்துப்பிள்ளை) கடந்த 07.06.2024 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்துரை - ஆச்சிமுத்து தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் - செல்லாச்சி தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற சுப்பிரமணியம் விஸ்வலிங்கம் அவர்களின் அன்பு மனைவியும், யோகலிங்கம் (சொக்கன்), சந்திரமதி, உதயகுமார், தபோதினி, றமேஸ்குமார், செந்தூரன் ஆகியோரின் அன்புத் தாயாரும், அருந்ததி, சிவகுமார், நகுலேஸ்வரன், R.கவிதா, S.கவிதா ஆகியோரின் அன்பு மாமியாரும், வதனி, தயாறூபன், லேணுகா ஆகியோரின் பெரியதாயும், ராசபூபதி, நாகம்மா, காலஞ்சென்றவர்களான அப்புத்துரை, தங்கராசா, செல்வராணி ஆகியோரின் அன்புச் சகோதரியும், தேவி, சின்னராசா, அரியரத்தினம் ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.06.2024) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
மகன்
076 319 4562
077 636 6081

சாரதா வீதி,
சங்கத்தானை, சாவகச்சேரி.

(CR/42626) J-1

# மரண அறிவித்தல்



தோற்றம் 30 . 08 . 1936

மறைவு 10 . 06 . 2024

## அமரர் நல்லதம்பி பொன்னம்பலம்

**(முன்னாள் பேருந்து நடத்துனர்-இ.போ.ச கிளிநொச்சி)**

யாழ்ப்பாணம் மீசாலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் இல: 59/4 மகளீர் திட்டம் திருவையாறைத் தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட நல்லதம்பி பொன்னம்பலம் அவர்கள் நேற்று திங்கட்கிழமை (10.06.2024) அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நல்லதம்பி-பொன்னம்மா தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான சின்னப்பு-வள்ளிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற நல்லம்மா (ஓய்வுபெற்ற ஆசிரியை-யா/மீசாலை விக்கினேஸ்வரா ம.வி) அவர்களின் அன்புக்கணவரும், காலஞ்சென்றவர்களான பேரம்பலம், சரஸ்வதி மற்றும் வீரசிங்கம், தியாகராசா, தவமணி, வன்னியசிங்கம், நவரத்தினம், செல்வநாயகி ஆகியோரின் அன்புச் சகோதரரும் காலஞ்சென்றவர்களான யோகாம்பிகை, சண்முகம், அன்னலட்சுமி, சரஸ்வதி, செல்வரத்தினம், நல்லதம்பி, தாமோதரம்பிள்ளை, தங்கம்மா கிருஷ்ணசாமி மற்றும் சுவர்ணா, சருந்தலாதேவி, கணேசநாதன், செல்லம்மா ஆகியோரின் அன்பு மைத்துனருமாவார்.அன்னாரது ஈமக்கிரியைகள் திருவையாறு இல்லத்தில் இன்று செவ்வாய்க்கிழமை 11.06.2024 நடைபெற்று மு.பகல் 11.30 மணியளவில் இரனைமடு இந்து மயானத்திற்கு தகனக்கிரியைக்காக எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
**ந.வன்னியசிங்கம்-சகோதரன்**
**(ஓய்வு பெற்ற எழுதுநர் வலயக்கல்வி அலுவலகம் கிளிநொச்சி)**
**077 388 4820**

(CR 42630) V-1

# பெருந்திருவிழா

விடத்தற்பளை சம்பாவெளி அருள்மிகு வீரகத்தி விநாயகர் ஆலய பெருந் திருவிழா நாளை புதன்கிழமை கொடி யேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது. எதிர்வரும் 20ஆம் திகதி வியாழக்கிழமை தேர்த்திருவிழாவும் மறுநாள் தீர்த்ததிரு விழாவும் இடம்பெறவுள்ளது. (ஒ-இ)

# தவறான முடிவெடுத்து குடும்பப்பெண் இறப்பு!

யாழ்ப்பாணம், ஜூன் 11

குடும்பப் பெண்ணொருவர் தவறான முடிவெடுத்து உயிரிழந்துள்ளார்.

அராலி பகுதியைச் சேர்ந்த குடும்பப் பெண்ணே இவ்வாறு உயிரிழந்தவரா வார். மேலதிக விசாரணைகளை பொலி ஸார் மேற்கொண்டுள்ளனர். (ம-125)

# வாள்வெட்டில் இளைஞர் காயம்

யாழ்ப்பாணம், ஜூன் 11

துணவிப் பகுதியில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற வாள்வெட்டுத் தாக்குதலில் படுகாயமடைந்த இளைஞர் ஒருவர் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை யில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இரு மோட்டார்சைக்கிள்களில் வந்த நால்வரே இந்தத் தாக்குதலை நடத்தியுள்ள னர். மேலதிக விசாரணைகள் முன்னெ டுக்கப்பட்டு வருகின்றன என்று வட்டுக் கோட்டை பொலிஸார் தெரிவித்துள்ள னர். (ம-125)

# கேள்வி அறிவித்தல்

## வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, புத்தூர்

## மேலதிக முத்திரைத்தீர்வை நிதி (SD)

01. வலிகாமம் கிழக்கு பிரதேச சபையானது மேலதிக முத்திரைத் தீர்வை நிதியைக் கொண்டு கீழ்காட்டப்பட்டுள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள வேலைத் திட்டங்களுக்கு கொடுப்பனவிற்கு பயன்படுத்த உத்தேசித்துள்ளது.

02. **தலைவர், உள்ளூராட்சிமன்ற பெறுகைக்குழு, வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, புத்தூர்,** சார்பாக தகுதி வாய்ந்த ஒப்பந்தகாரர்களிடமிருந்து அரக்கு முத்திரை யிடப்பட்ட கேள்விகளை கீழ்க்காட்டப்பட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்ட வேலைகளுக்காக கோருகின்றார்.

03. தேசிய போட்டி கேள்வி கோரல் நடைமுறைக்கு அமைவாகவும் நிதி அமைச்சினால் வெளியிடப்பட்ட 01.03.2024 ஆம் திகதிய 01/2024 ஆம் இலக்க பொது அரச நிதி சுற்றறிக்கைக்கு அமைவாகவும் கேள்வி கோரப்படுகின்றது கேள்வி பெறத் தகுதியுடையவராவதற்கு வெற்றிபெறும் கேள்விதாரர் கறுப்புப் பட்டியலில் (Black List) சேர்த்துக் கொள்ளப்படாதவராகவும், கீழுள்ள அட்டவணையில் காட்டியபடி பொருத்தமான தரத்தில் கட்டுமான துறையில் நிர்மாண கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையில் (CIDA) பதிவுகள் மேற்கொள்ளப்பட்டிருத்தல் வேண்டும்.

04. தேவையான தகைமைகள் கேள்வி ஆவணம் பகுதி 4 இல் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலதிக தகவல்கள் தரவு அட்டவணை (Schedule) கேள்வி ஆவணம் பகுதி 5 இல் காட்டப்பட்டுள்ளது.

05. பெறுமதிசேர்வரி (VAT) பதிவினைக் கொண்டவர்கள் கேள்விகள் சமர்ப்பிக்கப்படும்போது பெறுமதிசேர்வரி (VAT) சான்றிதழ் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். அவ்வாறான ஆவணங்கள் சமர்ப்பிக்கப்பட்ட கேள்விதாரர்களுக்கு மட்டுமே சபையினால் பெறுமதிசேர்வரி (VAT) கொடுப்பனவு மேற்கொள்ளப்படும்.

06. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் **தலைவர், பெறுகைக்குழு வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, புத்தூர். (தொலைபேசி இல: -021-205 8867 )** அவர்களிடமிருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்ளலாம். அத்துடன் மேற்கூறிய இடத்தில் வேலை நாட்களில் காலை 09:00 மணிமுதல் மாலை 15:00 மணிவரை 2024.06.11 ஆம் திகதியில் இருந்து 2024.06.26 ஆம் திகதி வரை கேள்வி ஆவணங்களை பார்வையிடலாம்.

07. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் பூரணமான கேள்வி ஆவணமொன்றை ஆங்கில மொழியில் தலைவர், பெறுகைக்குழு **வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, புத்தூர்**. அவர்களிடமிருந்து 2024.06.11 ஆம் திகதியிலிருந்து 2024.06.26 ஆம் திகதி வரையான வேலை நாட்களில் காலை 09:00 மணி தொடக்கம் 15:00 மணி வரைக்கும் இடையில் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா 3000/- செலுத்தி பெற்றுக்கொள்ளலாம். இத்தொகை பணமாகச் செலுத்தப்பட வேண்டும்.

08. கேள்வியினை இரு பிரதிகளில் தயாரித்து இடது பக்க மேல் மூலையில் வேலையின் பெயர் மற்றும் மூலப்பிரதி, இணைப்பிரதி என்பவற்றைக் குறிப்பிட்டு தனித் தனி கடித உறைகளில் இட்டு **தலைவர் பெறுகைக்குழு, வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, பருத்தித்துறை வீதி புத்தூர், யாழ்ப்பாணம்.** எனும் முகவரிக்கு 2024.06.27ஆம் திகதி பி.ப 2:00 மணிக்கு முன்பதாக கிடைக்கக் கூடியதாக, அனுப்பி வைக்கப்பட வேண்டும் அல்லது அலுவலகத்தில் வைக்கப் பட்டிருக்கும் கேள்விப் பெட்டியில் இடப்பட வேண்டும். பிந்திய கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது கேள்வி நேரம் முடிவடைந்த உடனேயே வருகை தரும் கேள்விதாரர் அல்லது அவர்களது பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.

09. கேள்வி, கேள்விப்பிணை செல்லுபடியாகும் காலம், கேள்வி பிணை வைப்புத் தொகை என்பன கீழே அட்டவணையிற் காட்டப்பட்டுள்ளது

10. கேள்வி கோரல் பற்றிய முன் கேள்வி கூட்டம் வலிகிழக்கு பிரதேச சபை மாநாட்டு மண்டபத்தில் 2024.06.18 ஆம் திகதி மு.ப.10:30 மணிக்கு நடைபெறும். இக்கூட்டத்தில் ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் கலந்து கொள்ளலாம். இதற்கு எதுவித கொடுப்பனவுகளும் வழங்கப்படமாட்டாது.

| ஒப்பந்த இலக்கம் | வேலை விபரம் | மதிப்பீட்டுத் தொகை (மில்லியனில்) | ஒப்பந்த காலம் | வேண்டப்படும் தரம் | கேள்வி சமர்ப்பிக்கப்படும் இறுதித் திகதியிலிருந்து கேள்வி செல்லுபடியாகும் காலம் | வேண்டப்படும் கேள்விப் பிணை: பிணை வைப்பு (ரூபா) | வேண்டப்படும் கேள்விப் பிணை: செல்லுபடியாகும் காலம் |
|---|---|---|---|---|---|---|---|
| NP/14/41(13)/4/Stamp Duty/2024/01 | அன்னமார் கோவில் வீதி புனரமைப்பு (வேப்பம்புலம் வீதி), புத்தூர் வடக்கு | 6.98 | 90 நாட்கள் | C7அல்லது C6 (வீதி நிர்மாணம்) | 77 நாட்கள் | 70,000.00 | 2024.10.09 |

தலைவர்,
உள்ளூராட்சிமன்ற பெறுகைக்குழு,
வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, புத்தூர்.

(cr 42628) (N-1)

2024.06.11

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 13ஆவது திருத்தம் தமிழர்களின் எதிர்பார்ப்பை பூர்த்தியாக்காது

## சஜித்திடம் சொன்னது தமிழரசு



யாழ்ப்பாணம், ஜூன் 11

13ஆவது திருத்தச்சட்டம் தமிழர்களின் எதிர்பார்ப்பை ஒருபோதும் பூர்த்தி செய்யாது என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித்திடம், தமிழரசுக் கட்சியினர் தெரிவித்துள்ளனர்.

யாழ்ப்பாணத்துக்கு வந்துள்ள சஜித்துக்கும், தமிழரசுக் கட்சிக்கும் இடையிலான சந்திப்பு மார்ட்டீன் வீதியில் உள்ள தமிழரசுக் கட்சியின் அலுவலகத்தில் நேற்று நடைபெற்றது. இதன்போதே 13ஆவது திருத்தம் தொடர்பான தனது நிலைப்பாட்டை தமிழரசுக் கட்சி சுட்டிக்காட்டியுள்ளது.

கிளிநொச்சியில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கருத்துத் தெரிவித்த சஜித் பிரேமதாஸ, தான் ஆட்சியமைத்தால் 13ஆவது திருத்தத்தை முற்றாக நடைமுறைப்படுத்துவேன் என்று தெரிவித்திருந்தார். இவ்வாறானதொரு பின்னணியிலேயே, வழங்கிய அதிகாரங்களை மீளப்பெறும் தன்மையுள்ள 13ஆவது திருத்தம் ஒருபோதும் தமிழ் மக்களின் எதிர்பார்ப்பைப் பூர்த்தி செய்யாது என்று தமிழரசுக் கட்சியினர் தெரிவித்துள்ளனர்.

வடமாகாண அவைத்தலைவர் சி.வீ.கே.சிவஞானம் மாகாணசபையின் அதிகாரங்கள் குறித்தும் சில நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்ல முடியாமை தொடர்பிலும் மாகாணசபை விவகாரங்கள் தொடர்பாகவும் சஜித்தின் கவனத்துக்குக் கொண்டுசென்றார். அவற்றையும் சஜித் கேட்டறிந்தார். அத்துடன், கடந்த தேர்தலில் சஜித்துக்கு வழங்கிய ஆதரவு தொடர்பிலும், சஜித் வழங்கிய வாக்குறுதிகள் தொடர்பிலும் இதன்போது கவனம் செலுத்தப்பட்டது.

(ம-125)

**விசேட கல்வித் துணை ஆசிரியர் தேவை**

யாழ் மாவட்டத்தில் Grade - 6 இல் கல்விகற்கும் விசேடகல்வித் தேவை உள்ள மாணவனிற்கு பாடசாலையில் வழிகாட்டியாக செயற்பட பல்கலைக்கழகத்திற்காக காத்திருப்போரும், உயர்கல்வி கற்றவர், A/L படித்த பெண் துணை ஆசிரியர் தேவை.

SMS செய்ய: 077 733 6533

# பொதுவேட்பாளரை தடுக்க முடியாது

## தமிழரசுக் கட்சியினருடனான சந்திப்பின் பின்னர் சஜித் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 11

இந்த நாட்டில் ஜனாதிபதித் தேர்தலில் யாரும் போட்டியிட முடியும். தமிழ்ப் பொதுவேட்பாளராக யாரும் போட்டியிட்டால் அதைத் தடுக்க முடியாது– இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியினரை, மார்ட்டீன் வீதியிலுள்ள கட்சியின் அலுவலகத்தில் நேற்று இரவு சந்தித்துக் கலந்துரையாடிய பின்னர் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

'தமிழ் பொதுவேட்பாளர் குறித்து ஜனாதிபதி வேட்பாளர் என்ற வகையில் உங்களது கருத்து என்ன?' என்று சஜித் பிரேமதாஸவிடம் கேள்வி எழுப்பப்பட்டது.

அதற்கு அவர், நான் ஜனநாயகவாதி. ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுமாறு நான் யாரையும் கட்டாயப்படுத்தமாட்டேன். அவ்வாறு கட்டாயப்படுத்துவது ஜனநாயகவாதம் அல்ல. ஜனாதிபதி வேட்பாளராக ஒருவர் தேர்தலை கேட்க முனைகின்றபோது அதனைத் தடுக்கவும் முடியாது. ஏனென்றால் இது ஒரு ஜனநாயக நாடு என்று பதிலளித்தார்.

தமிழ் அரசுக் கட்சியினருடனான சந்திப்புத் தொடர்பில் கேட்டபோது, வடக்கு மாகாணத்தின் அனைத்து மாவட்டங்களுக்கும் கல்விக்கு கூடுதல் கவனம் செலுத்துவது தொடர்பில் ஆராய்ந்தோம். அதேபோல பிரதேச செயலகம் மற்றும் கிராம மட்டங்களில் கல்வி தொடர்பான வேலைத் திட்டங்களை முன்னெடுப்பதற்கு நாங்கள் கல்விக்கு அதிகளவு நிதியொதுக்கி, வடமாகாணத்தை அபிவிருத்தி செய்வது தொடர்பிலும் கலந்துரையாடினோம்– என்றார்.

'கிளிநொச்சியில் வைத்து 13ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்துவதாகத் தெரிவித்திருந்தீர்கள். காணி மற்றும் பொலிஸ் அதிகாரத்தையும் வழங்குவதாக அர்த்தப்படுத்தலாமா? என்ற கேள்விக்கு,

13ஆவது திருத்தச் சட்டம் இன்று நேற்று வந்தது அல்ல. அது புதிதாக வானத்திலிருந்து குதித்ததும் அல்ல. அன்றிலிருந்து வருகின்றது. இது தொடர்பான பிரச்சினைகளும் அப்படித்தான். நாடாளுமன்றத்தின் ஊடாக இதிலுள்ள பிரச்சினைகளைச் சரிசெய்யமுடியும். அதற்குரிய விடயங்களும் நடக்கின்றன– என்றார்.

(ஓ-125)





**வடகோவையம்பதி**

**அமரர் கலாநிதி கார்த்திகேசு திருப்பதி**

**அவர்களின் 1ம் ஆண்டு நினைவஞ்சலியும் அவர்கள் ஆக்கிய**

**மாணிக்கவாசகரும், பெரியாழ்வாரும்**

**கையாண்ட இலக்கிய உத்திகள்**

**நூல் வெளியீட்டு நிகழ்வும் - 2024**

**அழைப்பிதழ்**

இடம் - யா/கோப்பாய் சரவணபவானந்த வித்தியாலயம், சிதம்பரப்பிள்ளை அரங்கு,

காலம் - 12.06.2024 புதன்கிழமை

நேரம் - பி.ப 2.30 மணி

தலைமை
திரு.ஐ.சிவலோகநாதன்
(செயலாளர், சமூகசேவா சங்கப் பாலர் பகல் விடுதி)

ஆசியுரை
பிரம்மஸ்ரீ பூரண கீதச்சந்திர குருக்கள்
(பிரதம குரு - வடகோவை ஸ்ரீ சித்திரவேலாயுத சுவாமி கோவில்)

வரவேற்புரை
திரு.செ. மோகனாதன்
(ஆசிரியர் யா/ஆவரங்கால் நடராஜ மகாஜனா வித்தியாலயம்)

நினைவுரை
திரு.த.தர்மராஜா (ஓய்வுநிலை ஆசிரிய ஆலோசகர்)
திரு. க. ஸ்ரீஸ்கந்தராஜா (B.Sc (Eng)) M.Eng பட்டயப் பொறியியலாளர்)
திரு.சு.சிவனேசராசன் (ஓய்வுநிலை ஆசிரியர்)

பிரதமவிருந்தினர்
சிரேஷ்ட பேராசிரியர் கலாநிதி ம.இரகுநாதன்
(தமிழ்த்துறை, யாழ்ப்பாண பல்கலைக்கழகம்)

நூல் வெளியீடு
திரு.கா.ஞானபண்டிதன் (சகோதரன்)

வெளியீட்டுரை
திரு.சந்திரமௌலீசன் லலீசன்
(அதிபர்,யா/கோப்பாய் ஆசிரியர் கலாசாலை)

நயப்புரை
கலாபூசணம் பிரம்மஸ்ரீ.ப.சிவானாந்தசர்மா (கோப்பாய் சிவம்) (B.A Hons)
திரு.அ.ஆனந்தராசா
(அதிபர்,யா/கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயம்)

ஏற்புரை
கலாநிதி கா.திருப்பதி அவர்களின் குடும்பத்தினர் சார்பாக
திரு.தெ.ஹர்சன்
(பிரதி முகாமையாளர் - மக்கள் வங்கி - யா/பல்கலைக்கழக கிளை)

நன்றியுரை
திருமதி.வி.இராகவன் (மாணவி)

நிகழ்ச்சித்தொகுப்பு
திரு.அ.பேரின்பநாயகம் (ஓய்வுநிலை ஆசிரியர்)

அனைவரையும் நிகழ்வில் கலந்து சிறப்பிக்குமாறு
அன்புடன் அழைக்கின்றோம்

நூல் வெளியீட்டுவிழா குழு,
கோப்பாய்.

# இராணுவ வாகனம் மோதி 2 இளைஞர்கள் படுகாயம்

யாழ்ப்பாணம், ஜூன் 11

இராணுவ வாகனமொன்று மோதியதில், இரண்டு இளைஞர்கள் படுகாயமடைந்துள்ளனர்.

பலாலி இராணுவ முகாமுக்குச் சொந்தமான கழிவகற்றும் வாகனமும், மோட்டார்சைக்கிளும் நேருக்குநேர் மோதியதிலேயே இந்த விபத்து இடம்பெற்றதாகச் சொல்லப்படுகின்றது. மோட்டார் சைக்கிளில் பயணித்த இரு இளைஞர்களும் படுகாயமடைந்த நிலையில் அவர்களில் ஒருவர் அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளார். இராணுவ வாகனத்தின் சாரதி கைது செய்யப்பட்ட நிலையில், மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன.

(ம-26-125)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பணிப்புறக்கணிப்பு முடிவுக்கு வந்தது

கொழும்பு, ஜூன் 11
ரயில்வே இயந்திர இயக்குநர்கள் சங்கத்தால் முன்னெடுக்கப்பட்டு வந்த பணிப்புறக்கணிப்பு கைவிடப்பட்டுள்ளது.

பதவி உயர்வு தாமதமாதல் உள்ளிட்ட பிரச்சினைகளை முன்வைத்து கடந்த 6 ஆம் திகதி நள்ளிரவு முதல் இரண்டு ரயில் முனையங்களைச் சேர்ந்த சுமார் 80 ரயில் இயந்திர இயக்குநர்கள் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டு வந்தனர். இந்த நிலையில் போக்குவரத்து அமைச்சர் பந்துல குணவர்த்தனவுடனான பேச்சில் இணக்கம் ஏற்பட்டதையடுத்து பணிப்புறக்கணிப்பை கைவிடுவதற்கு தீர்மானித்துள்ளதாக ரயில் இயந்திர இயக்குநர்கள் சங்கம் குறிப்பிட்டுள்ளது. (ஒ-இ)

## நாட்டைப்...

கிளிநொச்சியில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்ட சஜித், அரசமைப்பின் 13 ஆவது திருத்தம் தனது ஆட்சியில் முற்றாக நடைமுறைப்படுத்தப்படும் என்று தெரிவித்திருந்தார். இதையடுத்தே, பெரமுனவின் தேசிய ஏற்பாட்டாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான ரோஹித அபேகுணவர்த்தன கொழும்பில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் சஜித் மீது குற்றச்சாட்டுகளை முன்வைத்துள்ளார். ரோஹித அபேகுணவர்த்தன மேலும் தெரிவித்ததாவது:-

"அரசமைப்பின் 13 ஆவது திருத்தச்சட்டம் அமுல்படுத்தப்படும் என சஜித் கூறுகின்றார். 13 இனை புதிதாகக் கொண்டுவர வேண்டியதில்லை. மாகாணசபை முறைமையில் நல்ல விடயங்களும் உள்ளன. தீய விடயங்களும் உள்ளன. அதிகாரப் பகிர்வு இடம்பெறவேண்டும். எனினும், சிலர் அந்த அதிகாரப்பகிர்வைத் தவறாகப் பயன்படுத்தக்கூடிய சூழலும் காணப்படுகின்றது.

13 ஆவது திருத்தத்தில் உள்ள பொலிஸ் மற்றும் காணி அதிகாரங்களை எவ்வாறு அமுல்படுத்துவது என்பது பற்றி எதிர்க்கட்சித் தலைவர் தெளிவுபடுத்தவேண்டும். நாட்டில் ஸ்ரீலங்கா பொலிஸ்தான் உள்ளது. மாகாணங்களுக்குப் பொறுப்பான பிரதிப் பொலிஸ்மா அதிபர்கள் உள்ளனர். சஜித் ஆட்சிக்குவந்தால் வடக்கு - கிழக்குக்கு தனித்தனி பொலிஸ் செயற்படக்கூடும். இந்நாட்டில் 30 வருடகாலப் போர் நடைபெற்றது என்பதை மறந்துவிடக்கூடாது. பாதுகாத்த நாட்டை மீண்டும் பிரிக்கவா முயற்சி எடுக்கப்படுகின்றது?

ஜனாதிபதித் தேர்தலை இலக்கு வைத்து வாக்கு வேட்டை நடத்துவதற்காகவே எதிர்க் கட்சித் தலைவர் இவ்வாறு அறிவிப்பு விடுத்துள்ளார். 13 இல் உள்ள அதிகாரங்களை எவ்வாறு வழங்குவது என்பது பற்றி நாட்டு மக்களுக்குத் தெளிவுபடுத்த வேண்டும். கிளிநொச்சியில் கூறும் அதே விடயத்தை தெற்கிலும் கூறவேண்டும்" - என்றார். (அ-ம-44)

## இலங்கைக்கு...

புதுடில்லி சென்றுள்ள ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும் இந்திய அமைச்சர் கலாநிதி எஸ்.ஜெய்சங்கருக்கும் இடையிலான சந்திப்பு நேற்று நடைபெற்றது.

இந்திய முதலீட்டில் இலங்கையில் ஆரம்பிக்கப்பட்டு இடைநடுவில் தடைப்பட்டுள்ள அபிவிருத்தித் திட்டங்களைத் துரிதமாக மீள ஆரம்பிப்பது குறித்தும் ஆராயப்பட்டதோடு, இந்தச் செயற்பாடுகளை ஆராய்வதற்காக விரைவில் இலங்கைக்குப் பயணம் செய்யவிருப்பதாக ஜெய்சங்கர் தெரிவித்தார். அண்டை நாடுகளுக்கு முதலிடம் கொடுக்கும் இந்தியாவின் கொள்கை குறித்தும் இந்தச் சந்திப்பில் கருத்துப் பரிமாறப்பட்டன.

திருகோணமலையை மையமாகக் கொண்டு இந்திய அரசாங்கத்தால் ஆரம்பிக்கப்பட இருக்கும் கைத்தொழில் வலயம் தொடர்பாகவும் இதன்போது ஆராயப்பட்டதோடு பல இந்திய முதலீட்டாளர்கள் அங்கு தமது முதலீடுகளை மேற்கொள்ளவுள்ளதாகவும் இந்தத் தொழில் வலயத்தில் இந்தியாவைத் தவிர ஏனைய நாடுகளின் முதலீட்டாளர்களையும் முதலீடு செய்வதற்கு இணைத்துக்கொள்ள எதிர்பார்ப்பதாகவும் ஜெய்சங்கர் குறிப்பிட்டார்.

இந்தச் சந்திப்பில் கருத்துத் தெரிவித்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, புதிய பொருளாதார மாற்றச்சட்டத்தின் மூலம் விவசாயம், சுகாதார கல்வி மற்றும் பொருளாதார முகாமைத்துவம் ஆகிய துறைகளின் அதிகாரங்கள் மாகாணசபைகளுக்கு வழங்கப்படவுள்ளதாகவும், உண்மை மற்றும் நல்லிணக்கச் சட்ட வரைவு எதிர்வரும் ஜூலை மாதத்துக்குள் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் எனவும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

இலங்கையில் செயற்படுத்தப்பட்டுள்ள விவசாய நவீனமயமாக்கல் வேலைத்திட்டம் தொடர்பிலும் இங்கு கலந்துரையாடப்பட்டதுடன் இரு நாட்டு மீனவர்களுக்கு இடையில் நிலவும் பிரச்சினைகளைத் தீர்ப்பது தொடர்பில் விரைவான தீர்மானத்தை எட்டுவது தொடர்பிலும் கவனம் செலுத்தப்பட்டது.

தோட்ட லயன் அறைகள், தோட்டக் கிராமங்களாக வர்த்தமானி மூலம் அறிவிக்கப்படும் எனவும், அது தொடர்பான வர்த்தமானி வெளியிடப்பட்டதன் பின்னர் உள்நாட்டலுவல்கள் அமைச்சின் தலையீட்டின் மூலம் அந்தந்த கிராமங்களை அபிவிருத்தி செய்யமுடியும் எனவும் ரணில் விக்கிரமசிங்க குறிப்பிட்டார்.

எதிர்வரும் காலங்களில் இலங்கைக்குப் பயணம் மேற்கொள்ளுமாறு இந்தியப் பிரதமருக்கு அழைப்பு விடுத்தது தொடர்பாகவும் ஜனாதிபதி ரணில் இதன்போது சுட்டிக்காட்டினார். (அ-ஒ-இ)

## தமிழீழம்...

பிரகாரம் நரேந்திர மோடி மூன்றாவது முறையாக பிரதமராகப் பதவியேற்றுள்ளார்.

நரேந்திர மோடி மீண்டும் பிரதமரானமைக்கு மகிழ்ச்சியை வெளிப்படுத்தியுள்ள மதுரை ஆதீனம் மேலும் தெரிவித்ததாவது:-

"இலங்கையில் லட்சக்கணக்கான மக்களைக் கொன்று குவித்தவர்களும் வெற்றிபெற்று விட்டார்களே என்ற வருத்தம் எனக்கு உள்ளது. அதன் காரணமாகத்தான் அவர்களால் மத்தியில் ஆட்சி செய்யமுடியவில்லை.

அதேநேரம், மோடி இலங்கைத் தமிழர்களுக்கு வீடு கட்டிக் கொடுத்தார். மோடிக்கு முக்கியமான கோரிக்கையை முன்வைக்கிறேன். ஈழத்தில் இருக்கும் மக்களைப் பாதுகாக்க தமிழீழம் உருவாகவேண்டும். மோடி பிரதமரானதில் எனக்கு மிக மகிழ்ச்சி. சீமானின் வெற்றியால் விடுதலைப் புலிகளுக்கு அங்கீகாரம் கிடைத்துள்ளது. சீமான் என்னிடம் தனி நாடு வேண்டும் எனக் கோரிக்கை வைக்க வேண்டும் எனக் கூறினார். அதனைத் தான் நானும் கூறுகிறேன்" - என்றார். (ம)

## கிணற்றுள்...

அந்தப் பெட்டியை மீட்டுள்ளனர். அதற்குள் விமான எதிர்ப்புத் தோட்டாக்கள் இருந்த நிலையில், நீதிமன்ற உத்தரவுக்கு அமைய அவற்றை அழிப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. (ம)

## சட்டவிரோத...

மீன்பிடி உபகரணங்களைப் பயன்படுத்தி தொர்ச்சியாக மீன்பிடியில் ஈடுபடுகின்றனர். இதனால் பாரம்பரிய சட்டபூர்வமான மீன்பிடியை வாழ்வாதாரமாகக் கொண்ட மீனவர்கள் மிகவும் பாதிக்கப்படுகின்றனர். ஆதலால், அதிகாரிகள் விரைந்து செயற்பட்டு சட்டவிரோத மீன்பிடியைக் கட்டுப்படுத்தவேண்டும் என்று போராட்டத்தில் ஈடுபட்ட மீனவர்கள் வலியுறுத்தினார்கள்.

போராட்டத்தைத் தொடர்ந்து, முல்லைத்தீவு மாவட்டச் செயலர் அ.உமாமகேஸ்வரனைச் சந்தித்து தமது பிரச்சினைகளை மீனவர்கள் எடுத்துக்கூறினார்கள்.

இந்த விவகாரம் தொடர்பில் அமைச்சருடன் கலந்துரையாடி மாவட்டச் செயலகத்தில் ஒரு கூட்டமொன்றை ஒழுங்கமைத்துத் தருவதாக மாவட்டச் செயலர் மீனவர்களிடம் தெரிவித்தார். (அ-ம-35)

## பதவிக்கு...

இவ்வாறு தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"அரசாங்கங்கள் மாறியபோதும் ஊழல் மோசடிகள் நிறுத்தப்பட்டதா? இல்லை. மாறாக ஊழல் மோசடிகள் செய்யும் அணியினரே மாறினர். சட்டம் மீறப்படுவது நிறுத்தப்பட்டதா? இல்லை. ராஜபக்சக்களின் ஆட்சியில் பிரபல்யமானவர்கள் சட்டத்துக்கு அடிப்பணியவில்லை. ரணிலின் ஆட்சியிலும் அவ்வாறுதான். பாரம்பரியமான குடும்ப ஆட்சி மாறியதா? இல்லை. வரலாற்றில் முதல் முறையாக செல்வந்த வர்க்கத்தின் ஆட்சி வீழ்த்தப்பட்டு பொதுமக்களின் கைகளில் அதிகாரம் கைமாறும் சந்தர்ப்பமொன்று உருவாகவுள்ளது.

இதுவரை காலம் தந்தையிடமிருந்து மகனுக்கும் அவர்களது உறவினர்களுக்கும் இடையில் பரிமாறியிருந்த நாடாளுமன்ற பதவிக்கு இலவசக் கல்வி முறையில் கற்ற புதிய தலைமுறையினர் தெரிவாகுவர் என்பதுடன், நாடாளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்துபவர்கள் சாதாரண மக்களாக இருப்பர்.

புதிய தலைமுறையினர் உள்ளூராட்சி மன்றங்களுக்கும், மாகாணசபைகளுக்கும், நாடாளுமன்றத்துக்கும் தெரிவாக வேண்டும். அந்த நிலையை உருவாக்குவோம். நாட்டைத் தூய்மைப்படுத்த எண்ணும் அரச ஊழியர்களால் அரச நிறுவனங்களும், திணைக்களங்களும் நிரப்பப்படவேண்டும். உண்மையாக நாட்டை நேசிப்பவர்களிடம் இந்த நாட்டின் அரசியல் அதிகாரம் மாற்றப்பட வேண்டும்" - என்றார். (ஒ-இ)

## நெடுந்தாரகைப்...

ஒன்றாகக் காணப்படுகிறது. இந்த நிலையில் நெடுந்தாரகை திருத்தப்பணிகளுக்காக திருகோணமலை கடற்படைத் தளத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டு அங்கு திருத்தப் பணிகளும் ஆரம்பமாகி இருந்தன. இவை முடிவுற்று அடுத்த மாதம் படகு பணிக்குத் திரும்பும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இதேவேளை - நெடுந்தீவுக்கான போக்குவரத்துச் சேவையை குமுதினி மற்றும் வடதாரகை என்பன வழங்கி வருகின்றன. மேலும் நெடுந்தாரகைப் படகு சேவைக்குத் திரும்பும் பொழுது வடதாரகை சோதனை நடவடிக்கைக்காக கொழும்புக்கு எடுத்துச் செல்லப்படவுள்ளது. (அ-ஒ-125)

## சுவர்...

முல்லைத்தீவைச் சேர்ந்த குடும்பத்தலைவர் தனது மனைவி மற்றும் 2 மாதக் குழந்தையுடன் வவுனியாவிலுள்ள தனது தங்கையின் வீட்டுக்கு கடந்த 7ஆம் திகதி வந்துள்ளார். தங்கையின் தற்காலிக வீட்டில் தங்கியிருந்தபோது நேற்றுமுன்தினம் மாலை 5 மணியளவில் வீட்டின் உட்பகுதியில் உள்ள கற்சுவர் குழந்தையின் மீது வீழ்ந்துள்ளது. உடனடியாக வீட்டார் வவுனியா பொதுமருத்துவமனைக்குக் கொண்டு சென்றபோதிலும் குழந்தை முன்னதாகவே உயிரிழந்துவிட்டதாக அறிவிக்கப்பட்டது. (அ-ஒ-18-110)

## நாடாளுமன்றில்...

தார். வடக்கு மாகாண வேலையில்லாப் பட்டதாரிகள் சங்கத்தின் ஏற்பாட்டில் யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்துக்கு முன்பாக கவனவீர்ப்புப் போராட்டம் நேற்றும் முன்னெடுக்கப்பட்டது. அங்கு சென்ற எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ போராட்டக்காரர்களுடன் கலந்துரையாடினார். தமது ஆட்சி உருவாகும் போது கல்வித்துறையில் சீர்திருத்தம் கொண்டுவருவதாகவும், மாற்றுத் திறனாளிப் பட்டதாரிகளுக்கு முன்னுரிமை வழங்கப்படும் எனவும் அவர் தெரிவித்தார். (அ-ஒ-66-125)

## 2025...

செலுத்துவது பொருத்தமாக இருக்காது. தேர்தலில் வெற்றிபெறும் தரப்புகள் பட்ஜெட்டைத் தீர்மானிக்கட்டும். ஆதலால், பட்ஜெட்டுக்குப் பதிலாக இடைக்காலக் கணக்கறிக்கையையே தற்போது தயாரிக்கமுடியும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (அ-ம-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பங்களாதேஷின் போராட்டம் வீண் தென்னாபிரிக்கா சுப்பர் 8க்குத் தகுதி



பங்களாதேஷ் அணியுடனான நேற்றைய ஆட்டத்தில் தென்னாபிரிக்க அணி 4 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றிபெற்றதன் மூலம், சுப்பர் 8 சுற்றுக்கு முதலாவது அணியாகத் தகுதி பெற்றுள்ளது.

ரி - 20 உலகக் கிண்ணத் தொடரின் 21 ஆவது ஆட்டம் இலங்கை நேரப்படி நேற்று இரவு இடம்பெற்றது. நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற தென்னாபிரிக்க அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது.
6 இலக்குகளை இழந்து 113 ஓட்டங்களைப்பெற்றது. கிளாசன் 46 ஓட்டங்களையும், மில்லர் 29 ஓட்டங்களையும் அதிகபட்சமாகப் பெற்றுக்கொடுத்தனர். தென்னாபிரிக்க அணி 23 ஓட்டங்களுக்கு 4 இலக்குகளை இழந்து தடுமாறிய நிலையிலிருந்தே இந்த ஓட்ட எண்ணிக்கையைப் பெற்றது. பந்து வீச்சில் சகிப் 3 இலக்குகளை வீழ்த்தினார்.
பதிலளித்து ஆடிய பங்களாதேஷ் அணியும் 50 ஓட்டங்களுக்கு 5 இலக்குகளை இழந்திருந்தது. ஹ்ரிட்டோ மற்றும் மஹமதுல்லா இருவரும் பங்களாதேஷ் வெற்றியை நோக்கி அழைத்துச் சென்ற போதும் இறுதிக் கட்டத்தில் அவர்களும் ஆட்டமிழக்க பங்களாதேஷ் அணி 7 இலக்குகளை இழந்து 109 ஓட்டங்களை மாத்திரம் பெற்று 4 ஓட்டங்களால் தோல்வியடைந்தது. பந்து வீச்சில் கேசவ் மகாராஜ் 3 இலக்குகளைக் கைப்பற்றினார். ஆட்டநாயகனாக கிளாசன் தெரிவானார். (ஒ-5)

# மின்சாரசபை சட்டவரைவை விரிவாக ஆராயவேண்டும்!

## தயாசிறி எம்.பி. தெரிவிப்பு

கொழும்பு, ஜுன் 11
மின்சாரசபை மறுசீரமைப்புச் சட்டவரைவு தொடர்பில் உயர்நீதிமன்றம் வழங்கியுள்ள வியாக்கியானத்துக் கும், துறைசார் மேற்பார்வைக் குழு முன்வைத்துள்ள அறிக்கைக்கும் இடையே வேறுபாடுகள் காணப்படுகின்றன. அதனால் இந்தச் சட்டவரைவு தொடர்பாக விரிவாக ஆராயப்படவேண்டும்.
-இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர தெரிவித்தார்.
நாடாளுமன்றத்தில் கடந்த வியாழக்கிழமை நடைபெற்ற மின்சாரசபை மறுசீரமைப்புச் சட்டவரைவு மீதான விவாதத்தில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-
இந்தச் சட்டவரைவு தொடர்பாக விரிவாக ஆராயப்பட வேண்டும் என்று வலியுறுத்தினோம். ஆனால், அதற்கான கால அவகாசம் வழங்கப்படவில்லை. இந்தச் சட்டவரைவு தொடர்பாகக் கடந்த இரு ஆண்டுகளாகப் பேச்சுகளில் ஈடுபட்டனர் என்று மின்சாரத்துறை அமைச்சர் கூறுகின்றார். ஆனால், துறைசார்ந்த நிபுணர்களுடன் விரிவான பேச்சுகள் நடத்தப்படவில்லை.
மின்சாரத்துறை அமைச்சருக்கு வரையறையற்ற அதிகாரங்கள் வழங்கும் போது ஏற்படும் விளைவு களுக்கு கடந்த காலச் சம்பவங்கள் சிறந்த எடுத்துக்காட்டாகக் காணப்படுகின்றன. மின்சாரத்துறை அமைச்சர் காஞ்சன விஜயசேகரவை நாங்கள் குறைகூறவில்லை. எதிர்காலத்தில் பதவிக்கு வருபவர்கள் முறையாகச் செயற்படுவார்களா? என்பதே எம்முன் உள்ள கேள்வி - என்றார். (எ-இ)

# அணை ஆடை வழங்கல்

பாடசாலை மாணவிகளுக்கான சுகாதார அணை ஆடைகளை பெற்றுக்கொள்வதற்கான வவுச்சர் வழங்கும் நிகழ்வுகள் பன்னங்கண்டி இந்து தமிழ்க்கலவன் பாடசாலையில் அண்மையில் இடம்பெற்றது. நிகழ்வில் வலயக் கல்விப்பணிப்பாளர் க.அ.சிவனருள்ராஜா கலந்துகொண்டு வவுச்சர்களை கையளித்திருந்தார். (ஒ-25-11)




வங்கி மீதி வசதி
(SHOW MONEY)
சகல நாடுகளுக்குமான விசாவினை உறுதிப்படுத்திக் கொள்ள குறைந்த கட்டணத்தில் வங்கி மீதி வசதிகள்
தொடர்புகளுக்கு: (CS/719) J-1
074 173 7684

உடன் தேவை
இலத்திரனியல் உபகரணங்கள் விற்பனை செய்யும் நிறுவனம் ஒன்றிற்கு கணக்குப் பதிவுனர், அலுவலக உதவியாளர் (பெண்) தேவை.
தொடர்புகளுக்கு:
077 356 2043

பணியாளர்கள் தேவை
(சுத்திகரிப்பாளர்கள் Cleaners)
யாழில் இயங்கிவரும் பிரபல உயர்தர சைவ உணவகம் ஒன்றிற்கு சுத்திகரிப்பாளர்கள் தேவைப்படுகின்றனர். உணவு, தங்குமிடவசதி இலவசம் சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.
தொடர்புகளுக்கு: (CS 720) V-1
077 829 5658, 077 361 1301

31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்



கடந்த 16.05.2024 புதன்கிழமை அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவி
அமரர் சிவசூரியன் ஜென்சியா
அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் நாளை (12.06.2024) புதன்கிழமை காலை 7.00 மணியளவில் கீரிமலை புனிததீர்த்தக்கரையிலும் வீட்டுக்கிருத்திய கிரியைகள் எதிர்வரும் (14.06.2024) வெள்ளிக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்திலும் நடைபெறும். அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.
அன்னாரின் மரணச்செய்தி கேட்டு நாம் துயருற்று இருந்த வேளையில் நேரில் வந்தும் தொலைபேசியூடாகவும் முகநூல் மூலமும் எமக்கு ஆறுதல் கூறியவர்களுக்கும் மலர் வளையங்கள், மலர்மாலைகள் சாத்தியவர்களுக்கும், உற்றார், உறவினர், நண்பர்கள் அனைத்து உள்ளங்களுக்கும் எமது குடும்பத்தின் சார்பாக மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.
இவ்வழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்.
தகவல்:
குடும்பத்தினர்
076 664 5033
காளி கோவிலடி,
தாவடி தெற்கு, கொக்குவில்.
(CS/55292) J-1



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 11.06. 2024 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org